விலை ரூபா: 7.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 16 | சனிக்கிழமை | (02.10.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 288

WESTERN UNION
பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்



இடைக்கால அரசு வரைபு பற்றியும் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றியும் ஆராயும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், சட்டநிபுணர்களுடனான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் சுவிஸ்லாந்தில் ஆரம்பமானது. சுவிஸ்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள விடுதி மண்டபம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறுவதையும் தாயக விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் கொல்லப்பட்ட மக்களுக்குமான வணக்கம் செலுத்தப்படுவதையும் படத்தில் காணலாம்.

### தடைப்பட்டுள்ள சமாதான நகர்வுகளை முன்னெடுத்துச் செல்ல

# சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில்

# சட்ட நிபுணர்குழு மந்திராலோசனை!

### புலிகளின் பிரதிநிதிகள்; சட்ட நிபுணர்கள் பங்கேற்பு

**சமாதான முயற்சிகள் தேக்கநிலையடைந்துள்ள நிலையில் இடைக்காலத் தன்னாட்சி வரைபு பற்றியும் அடுத்தகட்ட சமாதான நகர்வுகள் குறித்த சாதக பாதக நிலைமைகளையும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் சட்ட நிபுணர்களும் நேற்று ஜெனீவாவில் கூடி மந்திராலோசனை நடத்தினர்.**

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால தன்னாட்சி வரைபு சர்ச்சை

## சுவிஸ் வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள்;நிபுணர்கள் ஆராய்வு

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார வரைவு தொடர்பாக தற்போது எழுந்துள்ள சர்ச்சைகள் பற்றிய ஆய்வொன்று நேற்று சுவிஸ்லாந்து வெளியுறவு அமைச்சின் உயரதிகாரிகளுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் சட்ட நிபுணர்களும் கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன், சட்டநிபுணர்களான முன்னாள் சட்டமா அதிபர் சிவாபசுபதி, சட்டநிபுணர் டொமினிக், மலேசியா சட்டநிபுணர் பரமசாமி, பொருளியல் நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம)



### 512 ஆவது பிரிகேட் தளபதி நீதிமன்றில் ஆஜராகவில்லை

(யாழ்ப்பாணம்)

குருநகரைச் சேர்ந்த நான்கு மீனவர்களை கடற்றொழிலுக்குச் செல்ல இராணுவம் தடுத்தமை தொடர்பான விசாரணை நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றது.

இவ் வழக்கு விசாரணைக்காக 512 ஆவது பிரிகேட் கட்டளைத் தளபதி ஆஜராகவில்லை. எனினும், அவர் சார்பில் மேஜர் பந்திரிவர்த்தன, இராணுவ சட்ட ஆலோசகர் சாந்த குரூப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வழக்கை விசாரணை செய்த மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் கடற்றொழிலாளர் சங்கத்தின் ஊடாக குறிப்பிட்ட நான்கு மீனவர்களும் பாஸ் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் உடனடி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நேற்றுப் பதற்றம் சந்திப்புக்களின் பின் தணிந்தது

(மன்னார்)

மன்னார் மற்றும் பேசாலைப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து நேற்றுக் காலை முதல் இன்று அதிகாலை வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

தலைமன்னார் வீதி கரிசலில் நேற்று முன்தினம் இரவு முஸ்லிம் வியாபாரி மொகமது சலீம் என்பவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாகவே ஊரடங்குச் சட்டம் அமுல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கொலைச் சம்பவத்திற்கும் புலிகளுக்கும் தொடர்பு இல்லை

### மன்னார் அரசியல்துறை அறிக்கை

(மன்னார்)

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்கும் எமக்கும் எதுவிதமான தொடர்புகளும் இல்லையெனவும் முஸ்லிம் குழுவொன்று எமது அரசியல் பணிமனைமீது நடத்திய தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது.

மன்னார் கரிசல் பகுதியில் இனந்தெரியாதோர் நடத்திய படுகொலையை அடுத்து விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை மீது முஸ்லிம் குழுவொன்று தாக்கியமை குறித்து மன்னார் மாவட்ட கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைப் பொலிஸாரின் உதவியுடன் சுமார் 40 பேர் கொண்ட முஸ்லிம் குழுவொன்று நேற்று முன்தினம் இரவு 12.45 மணியளவில் எமது அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன் அனைத்து ஆவணங்களையும் உபகரணங்களையும் தீமூட்டி எரித்துள்ளது.

இச் சமயம் 10 ற்கும் மேற்பட்ட பொலிஸார் காவல் கடமையை மேற்கொண்டிருந்தனர் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது (ம)

# நவம்பர் 22 ல் ஆஜராகுமாறு பிரபாவுக்கு நீதிமன்றம் உத்தரவு!

### உத்தரவுப் பத்திரம் ரணில் முகவரிக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நவம்பர் 22 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி. விஜயரட்ண உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கான உத்தரவுப் பத்திரத்தை முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்குமாறும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தபோதும் அவர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகாமல் இருந்தமையாலேயே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பொலிஸாரின் தாக்குதலுக்கு உயர்மட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்

## புதிய ஜனநாயகக்கட்சி ஜனாதிபதியிடம் வலியுறுத்து

(யாழ்பாணம்)

யாழ.குடாநாட்டில் சட்டமும் ஒழுங்கும் ஜனநாயக-மனித உரிமைகளின் அடிப்படையில் பொலிஸாரால் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்ற கேள்விக்கு உரிய பதில் தரும் விதத்திலேயே யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் தாக்கப் பட்ட சம்பவம் அமைந்துள்ளது. தகுந்த அதிகாரமும் அங்கீகாரமும் கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு உயர் அதிகாரிகளுககே இந்த நிலை ஏற்பட்டுள்ளதென்றால், சாதாரண பொதுமக்கள் அன்றாட வாழ்வில் இத்தகைய பொலிஸ் நிலையங்களில் எவ்வாறான அவலங்களையும் அவஸ்தைகளையும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்பதை புரிந்துகொள்ளமுடியும் என புதிய ஜனநாயகக்கட்சி அத்தாக்குதலை வன்மையாகக் கண்டிதது இதனைப் பாரதுாரமானவிடயமாக எடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதிக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் கோரிக்கையை முன்வைத்து புதிய ஜனநாயகக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல் குழுசார்பில் அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள இவ் அறிக்கையில்,

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் உயர் நீதிமன்றத் தற்குரிய அதிகாரத்தைக் கொணடுள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உயர் அதிகாரிகளான யாழ்.மாவட்ட இணைப்பாளர் ருவான் சந்திரசேகர, விசாரணை அதிகாரி எம்.பி.சற்பெரோஸ் மற்றும் ஐ.நா.மனித உரிமை ஆலோசகர் பற்றிக் ஆகியோர் யாழ்.பொலிஸ் நிலைய அதிகாரியினாலும் பொலிஸாரினாலும் தூஷிக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர்.

தமது அதிகார வரம்பிற்கு உட்பட்ட கடமையைச் செய்வதற்தே இம் மனித உரிமை அதிகாரிகள் யாழ்.பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கைதுசெய்யப்பட்ட ஒருவர் பற்றி விசாரித்திருக்கிறார்கள். இதற்கு நியாயமான பதிலைக் கூற வேண்டிய பொலிஸார் அடாவடித்தனமானமுறையில் தாக்குதல் நடத்தி இனத்துவேசமும் பேசியிருக்கிறார்கள்.

வடபுலத்தில் சட்டம ஒழுங்கும் மனித உரிமைகளும் காலில் போட்டு மிதிக்கப்பட்டுவந்த கடநத காலத்தின் நடைமுறைகளில் சிறிதளவாவது மாற்றமடைந்து வருகின்றன என்று நம்பவைக்கப்பட்டு வரும் ஒரு சூழலிலேயே, யாழ்.பொலிஸ் நிலையத்தில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இச் சமபவம் மக்களை அச்சமடையச் செய்துள்ளது. தமது மனித உரிமை மீறல்களைப் பற்றிய முறைப்பாடுகளை இனி எங்கு சென்று முறையிடுவது என்ற ஏக்கத்தை இச்சம்பவம் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

ஆதலால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவினர் யாழ்.பொலிஸாரினால் தாக்கப்பட்ட சம்பவத்தை உயர்மட்ட விசாரணைக்கு எடுத்து உரிய நடவடிக்கைகள் எடுக்கபபடுவதையே மக்களின் சார்பாக எமது கட்சி வற்புறுத்துகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# ஜே.வி.பி.கலந்துரையாட ஜனாதிபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

நாட்டில் என்றுமில்லாதவாறு அதிகரித்துச்செல்லும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துவது அவசியமென்று ஜே.வி.பி.ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ஜே.வி.பி.யின செயலாளர் ரில்வின்சில்வா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துளளார்.

உலக சந்தையில் எிபொருளின் விலை உயர்ந்தமையினால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்றவகையில் அது தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு விலை உயர்வடைந்துள்ளது. இதனாலேயே வாழ்க்கைச்செலவு அதிகரித்துக் காணப்படுகின்றது.

மக்களின் நடைமுறை வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வகையில் சில ஆலோசனைகளைக குறிப்பிட்டிருக்கும் ரில்வினசில்வா சில விடயம் குறித்தும் ஆராயலாமென்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-8)

# வேலையிலிருந்து நீக்கப்படுவோருக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வேலையில் இருந்து விலக்கப்படும ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தொழில அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

புதிய நட்டஈட்டு முறையின் ஊடாக வேலையில் இருந்து நீக்கப்படும் ஊழியருக்கு 48 மாத சமபளம் நட்டஈடாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன வேலையில் இருந்து நீக்கப்பட்ட ஊழியர் புதிய வேலை ஒன்றைத தேடும் வரை 12மாத சம்பளத்தை நட்டஈடாக வழங்குவதற்கும் தொழில் அமைச்சு விசேட நிதியம் ஒன்றை அமைத்துள்ளது. (க-61)

# ம.உ.ஆ.குழ அதிகாரிகள் மீதான தாக்குதல் பாரதூரமான குற்றமாகும்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சமாதான நடவடிக்கைகள் குறித்து முழு உலகமுமே மிகவும் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சட்டத்தின் பாதுகாவலர்களான பொலிஸாரால் கொடூரமாகத் தாக்கப்பட்டமை மிகவும் பாரதூரமான குற்றமாகும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தாக்கப்பட்டமை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுளளது.

இணையத்தின் தலைவர் வி.ஸ்ரீ.சத்திவேல் கையொப்பம் இடடு அனுப்பியுள்ள அக்கடிதத்தில்,

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் தமது பணிகளை மிகவும் நேர்மையாகவும் விசுவாசமாகவும் திறமையாகவும் செய்து வரும் இவ்வேளையில் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கு களங்கம் ஏற்படுத்துவது போன்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அரசாங்கம் இணங்கண்டு உரிய தண்டனைகளை வழங்கவேண்டியது அவசியமாகும். மேலும் மனிதஉரிமைக்ள் ஆணைககுழுவின் அதிகாரிகளையே பொலிஸார் தாக்குகின்ற போது சாதாரண குடிமகனின் நிலைமை எப்படியிருககும் எனக் கற்பனை செய்து பாருங்கள்.

எனவே இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான தாக்குதல் குறித்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-16)

# சீனியின் விலையைக்குறைக்க அரசாங்கம் உதவவேண்டும்

## உள்ளூர் சீனி உற்பத்தியாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சீனி உற்பத்தியாளர்கள் உளளூரில் சனியின் விலையைக குறைப்பதற்கு தமக்கு அரசாங்கம் உதவவேண்டும் எனக் கேட்டுள்ளனர்.

உலக சந்தையில் சீனியின் விலை அதிகரித்துள்ளதால் உளளூர்ச் சந்தையிலும் சீனியின் விலை அதிகரித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பு தொடர்ந்தும் இடம்பெறாதிருக்க உள்ளூரில் சீனி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

அவ்வாறு சீனி உற்பத்தியை அதிகரிப்புச்செய்ய வேண்டுமானால் ஹிங்குராங்கொட, கந்தளாய் சீனித் தொழிற்சாலைகளை இயங்கவைக்கவேண்டும் எனக் கூறும் அவர்கள்,

இதற்கு அரசாங்கம் தான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும என்று கேட்டுள்ளனர். (க)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் யாழ்.கல்வி வலயம்முன் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள நேற்று முன்தினமும் யாழ். வலயக கல்விப்பணிமனை முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர்.

நேற்றுக்காலை 11மணியளவில யாழ்.வலயக் கல்விப்பணியின் வாசல் கதவை மூடி உள் இருந்தவர்களை வெளிச்செல்ல விடாமலும் வெளியில் இருந்து உடசெல்ல அனுமதிக்காமலும் சுமார் இருமணி நேரம் இப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஆாப்பாட்டத்தில் ஈடுபட்டனா.

அரசிற்கெதிரான சுலோக அடடைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கு-கிழககில் உள்ள 723 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கும நிரந்தர நியமனம் வழங்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனக் கோரியே யாழ்.வலயக் கல்விப் பணிமனை முன்பாக ஆர்ப்பாட்டம் நேற்று நடத்தப்பட்டுள்ளது.

ஆர்பபாட்டத்தின் இறுதியில் இவர்கள் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளருக்கும், யாழ். கல்விக்கழகப் பொறுப்பாளருககும் தமது கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜரை கையளித்தனர்.

இதேவேளை, மேற்படி கோரிககைகளை வலியுறுத்தி பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கடநத புதன்கிழமையும் யாழ. செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

# இடைக்கால திட்டவரைபின்கீழ் பேசுக இல்லையேல் ஐ.தே.க ஆதரவு வழங்காது

## செய்தியாளர் மாநாட்டில் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் மீண்டும் ஆரம்பித்தால் மடடுமே ஐக்கியதேசியக்கட்சி அதன் பூரண ஆதரவினை சமாதான முயற்சிகளுக்கு வழங்குமென்று ஐக்கியதேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டும். ஆலோசனைக்குழுக்கள் மூலமான பேச்சுவார்த்தை என்று கூறி அரசாங்கம் காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் விடுக்க வேண்டும் என வலியுறுத்தும் பொருட்டு ஆட்சேபனை இயக்கம் ஒன்றை மேற்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சி தயாராக இருக்கின்றது. (த-121)

### பாதாள உலகக் கும்பல் தலைவர் ஒருவர் கைது

(கொழும்பு)

மனித படுகொலைகள பலவற்றுடன் தொடர்புடையவர் எனச் சநதேகிக்கப்படும் பாதாளக் கும்பலின் தலைவர் ஒருவரை பெரளேகல பிரதேசத்தில வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த ஆகஸ் மாதம் 24ஆம் திகதி வீரக்கொட்டுவளவில் இடம்பெற்ற 4 படுகொலைச் சம்பவங்களுடன் இவருக்குத் தொடர்பிருப்பதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருக்கையிலேயே பிரஸ்தாப நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இவரிடம் இருந்து கைக்குண்டு ஒன்றும் துப்பாக்கிகள் சிலவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. 13 கொலைச்சம்பவங்களுடன் இவருக்குத் தொடா பருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-121)

# சிரேஷ்ட ஊடகவியலாளர் கல்கிசையில் கொலை

(கொழும்பு)

லோறன்ஸ் ஜயசேகரா என்ற சிரேஷ்ட சிங்கள ஊடகவியலாளர் கடந்த திங்கட்கிழமை கல்கிசையில் வைத்து இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில செய்தி அறிவிப்பாளரான இவர் சண் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகவும் கடமையாற்றி வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது கொலைக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. (க)

# டீசல் விலை உயர்வை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

டீசலின் விலையைக்குறைக்குமாறு அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து ஊழியர்கள சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அகில இலங்கைப் பாடசாலை போக்குவரத்து ஊழியர்சங்கத தினர் நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தினர். டீசலின் விலையைக் குறைக்க முடியாவிடின் தமது சங்கத்திற்குச சலுகைகளை யாவது பெற்றுத் தருமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

டீசலின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரிக்க முடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ள அச் சங்கம் போக்குவரததுக் கட்டணங்களை அதிகரிப்பது தற்போதைய பொருளாதார நிலைமையில் பெற்றோர்கள் மீது சுமத்தபபடும் மேலதிக சுமையாகும் எனவும் மேலும் தெரிவித்துள்ளது. (ற-121)

## நினைவுக்கல் நாட்டலும் வீரவணக்கக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

மூன்று மாவீரர்களின் நினைவுக்கல் நாட்டலும், வீரவணக்கக் கூட்டமும் நேற்று முன்தினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்றன.

யாழ.மாவட்டத்தில் 16.12.97 இல இடம்பெற்ற இராணு [illegible] வளைப்பின் போது வீரச்[illegible]வைத் தழுவிக் கொண்ட கடற்புலி மேஜர் தேனமுதன் (யூரிகுரூஸ் பிரபாகரன் - யாழ்ப்பாணம்) 12.06.97 அன்று யாழ்.மாவட்டத்தில் இராணுவச் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவைத் தழுவிய கடற்புலி லெப்டினன் இறையரசன் (செல்வராசா அமல்ராஜ் - யாழ்ப்பாணம்) மற்றும் 30-09-95 அன்று யாழ்.மாவட்ட இராணுவச் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த கடற்புலி லெப்டினன் கலையரசன் (இராசு தம்பிராசு- யாழ்ப்பாணம்)ஆகிய மாவீரர்களின் திருவுருவப்படங்கள் துயிலும் இல்லத்தில் வைக்கப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

வடமராட்சிக் கோட்ட கடற்புலிகளின் மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் கல்யானி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்பொன் தியாகம், மாவீரர் கடற்புலி லெப்டினன் இறையரசனின் தாயார் மற்றும் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் மாவீரரின் திருவுருவப் படங்களுக்கான ஈகைச்சுடரினை ஏற்றினர்.

மலர் மாலையினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, மாவீரர் இறையரசனின் சகோதரி மற்றும் கடற்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் ஆகியோர் அணிவித்தனர்.

வீரவணக்க உரையினை மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகம, கோப்பாய் கல்வியியல் கல்லூரியைச சேர்ந்த சுதன் மற்றும் கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன் ஆகியோர் நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து இம் மாவீரர்களின் நினைவுக் கற்கல் கோப்பாய் மாவீரர் உயிலும் இல்லத்தில் நாட்டப்பட்டனர். இந் நிகழ்வில் பொது மக்களும் போராளிகளும கலந்து கொண்டனர்.

(க-121)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதி, நெல்லியடி கிளைகளில் 30.06.2003 ற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 02.10.2004 திகதியில் யா/ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | பின்வரும் திகதிகளுக்கு முன்பு அடகு வைத்த நகைகள் | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|---|
| 1 | யாழ். பிரதான வீதி -104 | 30.06.2003 | 02.10.2004 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 2 | நெல்லியடி - 106 | 30.06.2003 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்
யாழ்ப்பாணம் /வன்னி

மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்
(வடவலயம்)
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/603)

## கிழக்கு மாகாணத்தில் விரைவில் பிராந்திய வானொலி நிலையம் !

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பிராந்திய வானொலிச் சேவையொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்று 10 வருடங்கள் பூர்த்தியாவதையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வைபவங்களின் ஒரு அங்கமாகவே இந்த வானொலிச் சேவையின் அங்குரார்ப்பண நிகழ்வு அமையுமென தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வானொலிச் சேவையை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதியை வரவு, செலவுத் திட்ட நிதியில் இருந்து வழங்குவதற்குத் தகவல் ஊடகத்துறை பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் இணங்கியிருப்பதாகவும் அவ்வறிக்கையில சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு கடந்த புதன்கிழமை விஜயம் செய்த பிரதியமைச்சர் பல பிரதேசங்களுக்கும் சென்று வானொலி நிலையத்தை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைப் பரிசீலனை செய்துள்ளார். இந்தப் பிராநதிய வானொலி நிலையம் விரிவான ஒலிபரப்பு வலைப் பின்னலைக் கொண்டதாக அமையுமெனவும் பிரதித் தகவல் ஊடக்துறை அமைச்சின் செயலகம் விடுத்துள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-121)

## 1100 கலைப்பீட மாணவர்கள் கொழும்புப் பல்கலைக்கு உள்ளீர்ப்பு

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக் கழகத்திறகு அடுத்த வருடம் கலைப்பீடத்திற்காக ஆயிரத்து 100 மாணவர்கள் அனுமதிக்கப்பட இருபபதாக பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தற்போதுள்ள விடுதி வசதிகள் இவர்களுக்குப் போதுமானதாக இல்லையென்றும் தெரிவித்த அவர்கள்,

இதனால் விடுதியாகப் பாவிக்கப்படக்கூடிய பத்து வீடுகளை வாடகைக்கு எடுப்பதற்கான அவசியத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தெரிவித்திருப்பதாக பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் கூறியுள்ளனர். (க-7)




அகில இந்திய லோக்பால ஆயுக்தா மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டு பேசுகையில் லோக்பால வசாரணை வரம்புக்குள் பிரதமர் பதவியையும் சேர்க்க கட்சிகள் மத்தியில் கருத்து ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்று கூறினார்.

## இந்தியச் செய்திகள்

## கட்டாய ஓய்வு உத்தரவுக்கு எதிராக மனு

கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டதை எதிர்த்துப் பெரியகுளம் வனச்சரகர் இராஜேந்திரன் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்துள்ளார்.

பெரியகுளம் காட்டுப்பகுதியில் பெறுமதியான மரங்கள் களவாக வெட்டிக்கடத்தப்படுவதற்கும் தமிழக அமைச்சர் ஒருவரின் தம்பிக்கும் தொடர்பு இருப்பதாக இவர் பொலிஸில் செய்த புகாரையடுத்து கடந்த மாதம் 25 ஆம் திகதி தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். இந்தப்பணி நீக்க உத்தரவுக்குச் சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்தது.

இதையடுத்து மீண்டும் பணியில் சேர்த்த இவரை தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பொலிஸ மீண்டும் ஃகது செய்தது.

இவ்வழக்குகளில் நீதிமன்றம் இவருக்குப் பிணை அளித்ததையடுத்து இவருக்குக் கட்டாய ஓய்வு அளிப்பதாக கடந்த 12 ஆம் திகதி அரசு உத்தரவிட்டது.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் இருக்கும் போது கட்டாய ஓய்வு அளித்தது தவறு; அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென இராஜேந்திரன் தாக்கல் செய்த ரிட்மனுவில் குறிப்பிட்டுள்ளார். (து)

## வீராணம் தோல்வியை மறைக்க ஜெயலலிதா ஆடும் நாடகம்

தெலுங்கு கங்கைத் திட்டத்தினபடி ஆண்டுதோறும் 12 டி.எம்.சி.தண்ணீர் தமிழகத்துக்குக் கிடைத்தால் சென்னையில் குடி நீர்ப் பஞ்சமே ஏற்படாது என ப.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். திண்டிவனத்தையடுத்த தைலாபுரத்தில் டாக்டர் ராமதாஸ் செய்தியாளருக்கு அளித்த பேட்டியின் போதே இதைத் தெரிவித்தார்.

15 நாட்களில் கிருஷ்ணா நீர் சென்னைக்கு வருமென ஆந்திர முதல்வர் மத்திய அமைசசர் பாலு மூலம் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அறிவித்திருக்கிறார். இதற்கிடையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஹைதராபாத் செல்வதும், தண்ணீர் விடுகிறோம் என்று அறிவித்தபின் திறந்து விடுங்கள் எனக் கோரிக்கை விடுப்பதும் ஏன் என்று அவர் கேட்டார்.

1000 கோடி ரூபா செலவிட்டு நிறைவேற்றிய வீராணம் திட்டம் தோல்லி அடைந்துவிட்டதால் அதை மறைக்கவே இப்போது கிருஷ்ணா நீர் பற்றி ஜெயலலிதா பேச ஆரம்பித்தள்ளார் என்று அவர் மேலும் கூறினார். (து)

## 964 கோடி செலவில் தமிழகத்தில் மேம்பாலம் அமைக்கும் திட்டம்

### மத்திய அமைச்சர் பாலு அறிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் 964 கோடி ரூபா செலவில் பாலங்கள், ரயில்வே மேம்பாலங்கள், புறவழிச்சாலைகள் அமைக்கப்படுமென்று மத்திய நெடுஞ்சாலை, சாலைப் போக்குவரத்து அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்தார்,

சென்னை தாம்பரத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 3 சுரங்கப் பாதைகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதிலும் தேசிய நெடுஞ்சாலைகளில் 122 இடங்களில் 400 கோடி ரூபா செலவில் மேம்பாலங்கள் கட்டப்படுமென்றும், 134 கோடி ரூபா செலவில் 17 இடங்களில் ரயில்வே மேம்பாலங்கள் கட்டப்படுமென்றும், 23 இடங்களில் 250 கோடி ரூபா செலவில் மாபெரும் பாலங்கள் கட்டப்படுமென்றும், 38 இடங்களில் 180 கோடி ரூபா செலவில் புறவழிச்சாலைகள் அமைக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

குராம்பேட்டை பஸ் நிலையம் அமைக்க 27 இலட்சம் ரூபாவும், தாம்பரம் பஸ் நிலையத்துக்கு 30 இலட்சம் ரூபாவும் 2002 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட போதிலும் அவை அமைக்கப் படவில்லையென்றும், குராம்பேட்டை பஸ்நிலையம் அமைக்க ஒதுக்கப்பட்ட பணம் திட்டம் நிறைவேற்றப்படாமல் ஓர் ஆண்டுகளுக்குப் பின் 2 இலட்சம் ரூபா வட்டியுடன் தமிழக அரசால் மத்திய அரசுக்குத் திருப்பித்தரப்பட்டதாகவும் அமைச்சர் கவலை தெரிவித்தார். (து)



சென்னை வந்துள்ள சேலம் இளம்துறவி பரனிதரன், கடந்த புதன்கிழமை கீழ்பாக்கத்தில் உள்ள சங்கர மடத்தில் சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைச் சந்தித்தார்.

# வளர்ந்து வரும் ஊடகவியலாளருக்கு வழிகாட்டும் எம்.எம்.ஐ.சி (MMIC)

**இலங்கை வெகுஜன ஊடக பயிற்சி நிறுவனமான (MASS MEDIA INSTITUTE OF CEYLON) எம்.எம்.ஐ.சி. தனது கிளை நிறுவனம் ஒன்றை இல.15, சிறாம்பியடி ஒழுங்கை (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள 'மணியம்ஸ்' கட்டடத்தில் ஆரம்பித்து இயங்கி வருகிறது.**

**இந் நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.கே.ரமேஷ் தமது நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பயிற்சி நெறிகள் தொடர்பாகவும் அப் பயிற்சி நெறிகளைக் கற்றவர்கள் பெறக்கூடிய நன்மைகள தொடர்பாகவும் வலம்புரிக்கு அளித்த செவ்வி.**

**கேள்வி :- எம்.எம்.ஐ.சி. நிறுவனம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்று கூறுவீர்களா?**



இல. 15, சிறாம்பியடி ஒழுங்கையில் அமைந்துள்ள எம்.எம்.ஐ.சி ஊடகப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களில் ஒரு தொகுதியினர்.

**பதில் :-** தகவல் தொழில்நுட்பம் அசுர வேகத்தில் வளர்ந்து வரும் இன்றைய நவீன உலகில் தொடர்பாடலும் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதில் பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி போன்ற தொடர்புச்சாதனங்கள் இன்று முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. இவை தனியே பொழுதுபோக்கு ஊடகங்களாக மட்டு மன்றி, அத்தியாவசிய சேவைகளை வழங்குவனவாகவும், பிரச்சினைகளுக்கு தீர்வளிப்பனவாகவும், அறிவுப் பசிக்குத் தீனி போடுவனவாகவும் உள்ளன. ஆகவே இத்தகைய ஊடகங்களில் பணிபுரியும ஊடகவியலாளர்கள் மக்களிடையே மிகவும் மதிக்கப்படுபவர்களாகக் காணப் படுகின்றார்கள். அத்தகைய மதிப்பு மிக்க சிறந்த தேர்ச்சிகளையுடைய ஊடகவிய லாளர்களை உருவாக்குவதே எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமாகும்.

**கேள்வி :- எம்.எம்.ஐ.சி. நிறுவனம் தற்போது எவ்வகையான சேவைகளை வழங்குகிறது?**

**பதில் :-** எமது நிறுவனம் ஆரம்பிக் கப்பட முன்னர் இவ்வாறான சேவைகளை வேறெந்த நிறுவனமோ தனிப்பட்டவர் களோ வழங்கவில்லை. எமது நிறுவனம் அறிவிப்புத்துறை மற்றும் பத்திரிகைத் துறைகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்கும் புதிதாக அதிலீடுபட விரும்புபவர்களுக் கும் பயிறிசியளிக்கின்றது.

இன்று அரச, தனியார் வானொலிக ளிலும தொலைக்காட்சிகளிலும் மற்றும் பத்திரிகைகளிலும் எமது நிறுவனத்தில் பயிற்சி பெற்ற பலர் தொழில் புரிவதையும பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*செவ்வி கண்டவர் : தி.சரூபன்*

**கேள்வி :- தங்கள் நிறுவனத்தால் வழங்கப்படும் பயிற்சிநெறிகள் பற்றிய விபரங்களைத் தர முடியுமா?**

**பதில் :-** காலத்தின் தேவைக்கேற்ப எமது எம்.எம்.ஐ.சி.நிறுவனம் பயிற்சி நெறிகளைத் திட்டமிடுகிறது. தற்காலத தில் ஒலிபரப்புத்துறையில் **(FM)** எவ். எம்.எனப்படும் பண்பலை வரிசை ஒலி பரப்புகள் பிரபலமாக உள்ளன. இதனால் அறிவிப்பாளர்கள் மிகவும் பிரபலமான வர்களாக விளங்குவதுடன் அவர்களுக் கான தேவையும், வேலைவாய்ப்புகளும் அதிகமாகக் காணப்படுவதால் அறிவிப் பாளர்களுக்கான பயிற்சிகளையே நாம் தற் போது முதன்மையாக வழங்குகின்றோம்.

இந்த அறிவிப்பாளர் பயிற்சி நெறி யில் வானொலி ஒலிபரப்பும் தொழில் நுட்பமும், விளம்பர அறிவிப்புகள், வானொலி அறிவிப்பில் பயன்படுத்தப் படும் சமிக்ஞைகள், தொடர் அறிவிப்பு, பேட்டிகள், விளம்பர நிகழ்ச்சித் தயா ரிப்பு, ஒலிவாங்கியூடான பயிற்சி, செய்தித் தொகுப்பு, பிரதியாக்கம் போன்ற ஒலி பரப்பாளருக்கு அத்தியாவசியமான பயிற்சிகளை வழங்குகிறோம்.

**கேள்வி :-எம்.எம்.ஐ.சி. நிறுவனத்தில பயிற்சி பெற விரும்புபவர்களிடம் நீங்கள் எதிர்பார்க்கும் தகைமைகள் யாவை?**

**பதில் :-** பொதுவாக ஊடகத்துறை நிறுவனங்கள் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு ஆகக் குறைந்த தகை மையாக க.பொ.த. சாதாரண தரத்தையே வேண்டுகின்றன. ஆதலால் இப்பயிற்சி நெறியை மேற்கொள்ள விரும்புபவர் களின் நலன் கருதி நாமும் க.பொ.த. சாதாரண தரச் சித்தியையே எதிர் பார்க்கின்றோம்.

**கேள்வி :- உங்கள் நிறுவனத்தினால் வழங்கப்படும் பயிற்சிகளுக்கான கால எல்லை தொடர்பான விபரங்களைச் சொல்ல முடியுமா?**

**பதில் :-** எமது எம்.எம்.ஐ.சி நிறு வனத்தின் சகல பயிற்சி நெறிகளுக்கு மான கால எல்லை 3 மாதங்களாகும். ஆனால் டிப்ளோமா **(Diploma)** கற்கை நெறி மட்டும் 6 மாதங்களைக் கொண்ட தாக உள்ளது. ஏனெனில் இப் பயிற்சி நெறயில் பயிற்சியாளர்களை நேரடியாக களத்தில் ஈடுபடுத்தி பயிற்சியளிக்கப் படுகிறது. அதற்கமையவே இப் பயிற்சி நெறிக்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி :- இப் பயிற்சி நெறிகளை வழங்கும் பயிற்றுவிப்பாளர்களைப் பற்றி கூற முடியுமா?**

**பதில்:-** எம்.எம்.ஐ.சி.நிறுவனத்தில் பயிற்சி வழங்கும் பயிற்றுவிப்பாளர்கள் அனைவரும் அனுபவமிக்க மூத்த அறிவிப் பாளர்களும் பத்திரிகையாளர்களுமே. குறிப்பாக 20 வருடங்களுக்கு மேல் ஒலிபரப்புத் துறையில் அனுபவமிக்க ரி.சுந்தரலிங்கம் மற்றும் இலங்கை ஒலி பரப்புக கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப் பாளர் ஏ.திருஞானசுந்தரம், சற்சொரூப வதி போன்றவர்களின் ஆலோசனை களையும் நாம் பெற்று வழங்குகிறோம்.

**கேள்வி:- தங்களது இந்த வெகுஜன ஊடகப் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கு எந்தள வுக்கு அனுசரணையாகவுள்ளன?**

**பதில்:-** கொழும்பில் தலைமைய கத்தைக் கொண்டுள்ள எமது நிறு வனத்தில் பயிற்சி பெறும் சகலரையும் சிறந்த முறையில் பயிற்றுவித்து அவர் களை சர்வதேச மட்டத்தில் ஊடகத் துறையில் வல்லுநர்களாக திகழ வைக்க வேண்டுமென்பதே எமது நோக் கம். அதற்காக மாணவர் மன்றம் ஒன் றையும் உருவாக்கியுள்ளோம். எமது நிறுவனத்தில் பயிற்சி பெற்ற பலர் இன்று சர்வதேச ரீதியில் ஒலிபரப்புத் துறையில் சேவையாற்றி வருவதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*தொகுப்பு : பிரம்ம சாத்வி*



எம்.எம்.ஐ.சியின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.கே. ரமேஷுடன் பயிற்சி ஆலோசகர் மூத்த ஊடகவியலாளர் V.சுந்தரலிங்கமும் காணப்படுகிறார்.

**கேள்வி:- இறுதியாக எம்.எம்.ஐ.சி நிறுவனத்தின் இலட்சியம் என்னவென்று சொல்லுங்கள்?**

**பதில் :-** பொதுவாக மக்களுக்கும் சமூகத்துக்கும் ஏன் நாட்டுக்கும் தேவை யான நல்ல பல செயற்றிட்டங்களை அமுலாக்க ஊடகங்களே சிறந்த பங் களிப்பை வழங்க முடியும். அந்த வகையில் இத் துறையில் பயிற்சி பெற விழையும் இளைய தலைமுறையின ரைத் திறமைமிக்க சிறந்த ஊடக வியலாளர்களாக உருவாக்குவதே எமது வெகுஜன ஊடகப் பயிற்சி நிறுவனத் தின் ஒரேநோக்கமாகும். □

# அரசியல்வாதிகள், பொலிஸாரின் ஆதரவுடன் கொழும்பில் 28 பாதாள உலகக் குழுக்கள்!

## புலனாய்வு அறிக்கைகள் தகவல்

(கொழும்பு)

கொழும்பு நகர எல்லைக்குள் 28 பாதாள உலகக் குழுக்கள் செயற்பட்டு வருவதாக புலனாயவுத்துறையின் அறிக் கைகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பாதாள உலக குழுக்கள் கொழும்பு நகரைத் தமது ஆணைக் குட்பட்ட வலயங்களாகப் பிரித்து வைத் திருப்பதாகவும், ஒவ்வொரு வலயத்திலும் குறிப்பிடப்பட்ட குழுவினர் செயற்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

கொலை, கொள்ளை, பாலியல் துஷ் பிரயோகம், போதைப் பொருள் கடத்தல், ஆயுதங்களை வாடகைக்கு வழங்குதல் ஆகியன உட்பட ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளிலும் இந்தக் குழுக்கள் தமது ஆளுகைப் பகுதிகளிலும், அவற்றை தாணடியும ஈடுபட்டு வருகின்றன.

அத்துடன், இக் குழுக்களுக் கிடை யல் தோன்றும் பிணக்குகளே நாட்டில் அதிகமான கொலைகள் இடம்பெறக் காரணமாகவுளளன.

மேற்படி குழுக்கள் மிகச் சிறந்த முறை யில் புலனாய்வு வலயமைப்பை கொண் டுள்ளதனால் அரசாங்கத்தின் குற்றவியல் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் இவற்றின் செயற்பாடுகளை முறியடிக்க முடியாமலுள்ளது.

அதேவேளை, இந்தப் பாதாள உலகக் குழுக்கள் அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோரின் ஆதரவுடனேயே செயற் பட்டுவருகின்றன.

மேற்படி ஒவ்வொரு குழுக்களிலும் தலா ஆகக் குறைந்தது 300 பேராவது செயற்பட்டு வருவதுடன், இவர்கள் ரி-56, ரகத் துப்பாக்கிகள், கைத்துப்பாக் கிகள், கைக்குண்டுகள் மற்றும் உயர் தொழில்நுட்பக் கருவிகள் என்பவற் றைப் பாவித்து வருவதாகவும் புலனாய் வுத் துறையினரின் அறிக்கைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# மொத்தத் தேசிய உற்பத்தி குறித்து இலங்கை மத்திய வங்கி விளக்கம்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப இலங்கையின் எரி பொருள் விலையும் நூறு சதவீதம் ஒத் துப்போகவேண்டும் எனவும் அரசாங்கம் இவ் வாறு செயற்படவில்லையாயின் பின்னர் பொதுமக்கள் அந்தச் சுமை யைத் தாங்கவேண்டி ஏற்படும் எனவும் இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள் ளது.

இந்த வருடத்தின் 2 ஆம் காலாண் டின் மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்புக் குறித்துத் தெளிவுபடுத்து வதற்காக இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடாத்தியது. அந்த மாநாட்டிலேயே இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

நூற்றுக்கு நூறு வீதம் இதனைச் சரிப்படுத்தவில்லையாயின் இதனை யார் தாங்கிக் கொள்வது? நூற்றுக்கு நூறு வீதம் பொருட்களின் விலைகளில் மாற்றங்கள் ஏற்படுத்த முடியாது.

நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலை குறித்து எமக்குத் தெரியும். அரசாங்கத்திடம் தனியான பணம் எது வுமில்லை. கடன்கள் மற்றும் வரிகள் மூலம் தான் நாட்டிற்குப் பணம் கிடைக்கின றது. இந்த வருடத்தில் இரண்டாம் காலாணடின் மொத்தத் தேசிய உற்பத்தி 5.2 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இவ் வருடத்தின் முதல் அரையாண் டுப் பகுதியில் சிறந்த பொருளாதார அபி விருத்தி ஏற்பட்டது எனவும் இலங்கை மத்திய வங்கியினால் கருத்து வெளி யிடப்பட்டுள்ளது. (ற-121)

# நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட-இலங்கை சர்வோதய ஸ்தாப கரும் ஜீவதானியுமான தொண்டர் கந் தையா திருநாவுக்கரசின் மூன்றாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பத்துமணிக்கு புங்குடுதீவு வட-இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வோதய உறுப்பினர் ஓய்வுபெற்ற அதிபர் செல்வி ம.சுப்பிரமணியம் தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப் புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற் றம்பலம் திருநெல்வேலி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் இ. இராஜமகேந் திரசிங்கம், சைவப்புலவர் அ.சுப்பிர மணியம், புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் ந.கலைநாதன் மற் றும் கிராம அலுவலர் சு.ப.விநாயக மூர்த்தி ஆகியோர் உட்பட மற்றும் பல ரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

# விபத்தில் வயோதிபர் படுகாயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வீதி இமையான் குச்சர் கடைப்பகுதியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள் ளார்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த பிரஸ்தாப வயோதிபரைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதை யடுத்தே இவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தில் கரணவாய் மேற் கைச் சேர்ந்த கணபதி மாணிக்கம் (வயது 65) என்பவரே படுகாயமடைந்த வராவார். இவர் சிகிச்சைக்காக மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-150)

## பாக்டெல் முக்கோணத் தொடர்

# பாகிஸ்தான் அணி சிம்பாவ்வே அணியை 144 ஓட்டங்களால் இலகுவாக வென்றது

பாகிஸ்தானில் நடைபெறும இலங்கை பாகிஸ்தான், சிம் பாவ்வே அணிகள் பங்குபற



றும் முத்தரப்பு ஒருநாள் கிரிக் கெற் போட்டிகள் நேற்று முன் தினம் ஆரம்பமானது. இத் தொடரில் பாகிஸ்தான், சிம் பாவ்வே அணிகளுக்கிடையே முல்ரான் நகரில் நடைபெற்ற முதலாவது போட்டியில் பாகிஸ் தான் 144ஓட்டங்களால் பிர மாண்டமான வெற்றியை பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி 50 ஓவாகளில் 7விக்கெற்றுக்களை இழநது 292ஓட்டங்களைப் பெற் றது.

ஆரம்பத்தில் பாகிஸ்தான் விக்கெற்றுக்கள் விரைவாக வீழ்ந்தன. பசீர் ஹமீத் ஓட் டம் எதுவும் பெறாமலும் ஜாசித் கான் 12 ஓட்டங்களுடனும், சொயிப மாலிக் யூசுப்யுகானா ஆகியோர் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். இந்நிலையில பாகிஸ்தான் அணி 4விக்கெற் றுக்களை இழந்து 36ஓட்டங் களை மட்டுமே பெற்றிருந்தது.

இந்நிலையில் 5ஆவது விக் கெற்றுக்கு ஜோடி சேர்ந்த அணித் தலைவர் இன்சமாமும் அவ்ரி டியும் சிறப்பாக விளையாடி ஓட் டங்களைக் குவித்தனர்.

இன்சமாம் 74 ஓட்டங்களைப் பெறறு ஆட்டமிழந்தார். அதைத தொடர்ந்து அவ்ரிடியுடன் 6ஆவது விக்கெற்றுக்காக அப்துல் ரஸாக் ஜோடி சேர்ந்து இருவரும் மிக அபாரமாக விளையாடினர்.

அப்துல ரஷாக் 5 பவுண்டரி 5 சிகஸர் அடங்கலாக 107ஓட் டஙகளைப் பெற்று ஆட்டமிழக் காது இருநதார். இது ஒருநாள் போட்டிகளில் அவர் பெற்ற இரண்டாவது சதமாகும்.

அவ்ரிடி ஆக 26பந்துகளில் 58ஓட்டங்களைப் பெற்றார். இதில் 5 பவுண்டரிகளும், 4 சிக்ஸர்க ளும் அடங்கும். பந்து வீச்சில் ஹொன்டா 3விக்கெற்[illegible] யும் பணியங்கார 2 [illegible]க்கெற் றுக்களையும் பெற்றனா.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாவ்வே அணி 38.3ஓவர் களில் சகல விக்கெற்றுக்களை யும் இழந்து 148ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சிபாண்டா ஆகக்கூடுதலாக 57ஓடடங்களையும் ரெட்ஹைம் 29ஓட்டங்களையும் பெற்றனர். பநதுவீச்சில் பாகிஸ்தான் அணி சாபில் சயீட் அவ்ரிடி, சொயிப் மாலிக் ஆகியோர் தலா 3விக் கெறறுக்களையும் சொயிப் அக் தர், நவீட்-உல்-ஹசன் ஆகி



யோர் தலா 1 விக்கெற்றையும் பெற்றனர்.

இப் போட்டியின் ஆட்டநாய கனாக அப்துல் ரஷாக் தெரிவு செய்யப்பட்டார். (ப-7)



ஸ்பானிஸ் லீக் உதைபந்தாட்டம் போட்டியில் ஸ்பெஸினும் ஜேர்மனயும் மோதும் போட்டியில் ஸ்பானிய வீரர் வெலென் சியாவும் ஜேர்மனிய வீரர் வோர்டர் பிராமெனும் தலை யால் பந்தை தடுப்பதில் மோதிக்கொள்கிறனர்.

# இந்திய கிரிக்கெற்சபை தலைவராக ரன்பீர்சிங் மகேந்திரா தெரிவு

இந்திய கிரிக்கெற் சபை யின் புதிய தலைவராக ரன் பீர் சிங் மகேந்திரா பலதத போட்டியிடையே தெரிவு செய் யப்பட்டுள்ளார்.

கடந்த புதனன்று நடை பெறற இந்திய கிரிக்கெற்சபை யின் தேர்தலில் முன்னாள் தலைவர் ஜெகன் மோகன் டால்மியா ஆதரவாளரான ரன பீர் சிங் மகேந்திரா, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மத் திய அமைச்சரும் மும்பை கிரிக்கெற் சங்கத்தலைவரு மான சரத்பவாரை ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற் றார்.

நாட்டின் பொதுத் தேர்தலுக்கு இணையாக பேசப்படும் இத் தேர்தலல், இருமுறை தலைவ ராக டால்மியா பதவி வகித்து விட்டதால மீண்டும் போட்டியிட முடியாத நிலையில், அவரது ஆதிக்கத்தை முற்றாக ஒழிக்க வேண்டுமென ஒரு சாராரும், சரத்பவாரை கிரிக்கெற் சபைக் குள் எந்தவித்திலும் நுழைய விடக் கூடாது என டால்மி யாவின் ஆதரவாளர்களும் கடும் போட்டியில் தோதல் களத்தில் இறங்கினர்.

31பேர் வாக்களிக்கத் தகுதி பெற்ற இத் தேர்தலில் போட்டி யாளர்கள் இருவரும் தலா 15 வாக்குகளைப் பெற்றிருந்தனர் இறுதியாக வாக்களித்த டால் மியா, மகேந்திராவுக்கு ஆதர வாக வாக்களித்ததை அடுத்து அவ் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை சரத்பவாரின் ஆதரவாளாரான மஹராஷ்டிரா கிரிக்கெற்சங்கத் தலைவா ஆனந் மாதிவுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டதையடுத்து அதற் கெதிராக வழக்குத் தொடரப் போவதாக மஹராஷ்டிர கிரிக் கெற் சங்க நிர்வாகிகள் தெரி வித்துள்ளனர்.

புதிய தலைவரான ரன்பீர் சிங் மகேந்திரா பத்திரிகை யாளருளுக்கு தகவல் தருகை யில், கிரிக்கெற்சபை நடவடிக் கைகளில் எந்த மாற்றமும் இருக்காதென்றும், இதுவரை காலமும் இருந்துவந்த மரபுகள் தொடர்ந்தும் பேணப்படும் என் றும் தெரிவித்தார்.

மேலும் டால்மியாவின் நிழ லாக தான் இருக்க மாட்டா ரென்றும தனக்கென ஓர் தனித் துவம் இருக்கின்ற அதே வேளை டால்மியா தொடக்கி வைத்த நல்ல விடயங்கள் தொடர்ந்தும் பின்பற்றப்படும் என்றும் தெரிவித்தார். (ப-7)

# இந்திய அணியின் தெரிவாளராக விக்கெற் காப்பாளர் மோறே

இந்திய கிரிக்கெற் அணி யின் முன்னால் விக்கெற் காப் பாளரான கிரன்மோறே இந்தி யக் கிரிக்கெற் அணியின் பிர தான தெரிவாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் விக்கெற் காப் ப்ாளர் சையத் கிர்மானியின் தெரிவாளர் பதவிக்கான காலம் முடிவடைந்ததையடுத்தே அவர் இப் பதவிக்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளார். இவருடன் 5பேர் கொண்ட கிரிக்கெற் தெரிவுக் குழுவில் வி.பி.சந்திரசேகர் ஜக்பால் சர்மா, சஞ்சய் சத் தானி ஆகியோரும் தேர்வுக குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய பிரதான தெரிவாள ரான கிரன்மோறே 1984ஆம் ஆண்டு தொடக்கம் 1993ஆம் ஆண்டு வரை இந்திய அணிக்காக 94டெஸ்ட் போட்டிகளிலும் 49 ஒருநாள் போட்டிகளிலும் விளை யாடியுள்ளார். மோறே இரண்டு வருடங்களுக்கு பிரதான தெரி வாளராக கடமையாற்றுவார் என் பது குறிப்பிடத்தக்கது. (ப-7)

# தாய்லாந்து ஓபன் டென்னிஸ் காலிறுதிக்கு சபன் தகுதி

தாயலாந்து ஓபன் டென்னிஸ் போட்டியில் ரஷ்யாவின் மாகி ராட்சபன் காலிறுதிக்கு முன் னேறியுள்ளார்.

பாங்கொக்கில் நடைபெறும் ஏ.டி.பி.அநதஸ்துப் பெற்ற தாய் லாந்தின் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையா பிாவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுப போட்டிகள் நேற்று முன் தினம் நடந்தன. உலகின் முன் னால் முதல்தர வீரரான ரஷ்யா வின் மாகிரட்சபன் செக்குடிய ரசின் ஜெரிவனெக்கை எதிர்த்து விளையாடினர்.

இதில் சபன் 6-3,6-4என்ற நேர்செட்களில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றார். மற்றொரு இரண்டாம் சுற்றுப் போட்டியில் தற்போதைய சம பியனான அமெரிக்காவின் டெய் லர் டென்ட் 0-6,4-6என்ற செற் களில் ஹொலநதின் டென்னிஸ் வீரர் வோனிடம் தோல்விய டைந்தார். (ப-7)

# டுபாய் ஸ்போட்ஸ் சிற்றியில் கிரிக்கெற் பயிற்சிக் கூடம்

சர்வதேசக் கிரிக்கெற் பேர வையின் உலகப் பயிற்சிக்கூட மொன்று டுபாயில் அமைக்கப் பட இருக்கிறது.

முழுமையாக விளையாட் டுத்துறையை மேம்படுத்தும் நோக்கில் 'டுபாய் ஸ்போட்ஸ் சிற்றியல்' இப் பயிற்சிக்கூடம அமைக்கப்படவிருக்கிறது. இதன நிர்மாணப் பணிகள் 2007ஆம் ஆண்டுக்குள் நிறைவடைந்து விடும் என ஐ.சி.சி.யின் தலை வர் ஈசான் மானி தெரிவித்தி ருக்கிறார்.

டுபாய் ஸ்போட்ஸ் சிற்றி யில் அமையும் இப் பயிற்சிக் கூடம் 30ஆயிரம் ஆசனங்க ளைக்கொண்ட கிரிக்கெற் மைதானத்தைக் கொண்டதாக அமையும். உள்ளக வெளிக் களப் பயிற்சிகளை வழங்கக் கூடிய 3 திடல்களும் அதில அமைககப்படும். இது ஐ.சி.சிக்கு மாத்திரமன்றி முழு கிரிக்கெற் உலகுக்குமே நன்மை பயப்ப தாக அமையும் எனவும் ஈசான் மானி மேலும் தெரிவித்தார். (ப-7)

## விளையாட்டு செய்திகள்



தென் கொரியாவில் நடைபெற உள்ள டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்காக மேற்கு சியோல் விமான நிலையதிற்கு வந்த விம்பிள்டன் சாம்பியனும், ரஷ்ய வீராங்கனையுமான மரியாஷாரபோவாவிற்கு பூங்கொததுகொடுத்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

# ஆட்ட நிர்ணயம் குறித்த சர்ச்சை தென்னாபிரிக்க வீரர்மீது விசாரணை?

தென்னாபிரிக்க கிரிக்கெற் அணி இந்தியாவுக்கு வரும் போது ஆட்ட நிர்ணயம் தொடர் பாக கிப்ஸ் மற்றும் போயேவி டம விசாரணை நடத்தப்படுமா என டெல்லி பொலஸை இந்திய கிரிக்கெற் சபை கேட்டுள்ளது.

இவர்களிடம் விசாரணை நடத்தப்படுமானால் இந்தியத் தொடரை ரத்து செய்வோம என தென்னாபிரிக்கா அச்சுறுத் தியுளளதாகக் கூறப்படும். நிலை யில் இந்த நடவடிக்கையை கிரிக்கெற்சபை மேற்கொண்டுள் ளது.

இவ்விடயத்தில் இதுவரை டெல்லி பொலிஸ் முடிவேதும் எடுக்கவில்லை எனவும் கிரிக கெற் சபையின் கடிதம் தொடர் பாக ஆராய்ந்து வருவதாகவும் பொலிஸ் கமிஸனர்போல் தெரிவித்திருக்கிறார்.

2000ஆம் ஆண்டில் ஆட்ட நிர்ணயம் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் அதிகம் காணப் பட்டன. இவ்விவகாரத்தில் அசாரூதின் ஹன்சி குரோன்ஞே உட்பட பல வீரர்கள் இதில் தொடர்புகொண்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக தற்போது கிப்ஸ் போயே ஆகியோரிடம் விசா ரிக்க வேண்டும் என முன்ன தாக தென்னாபிரிக்காவை டெல்லிப் பொலிஸார் கேட்டி ருந்தனர்.

இதையடுத்தே தென்னாபிரிக் காவின அச்சுறுத்தும் அறிவிப்பு வெளியாகியுள்ளது கிப் , போயோவிடம் விசாரணை நடை பெறுமானால் தொடரைப் புறக் கணிக்கப்போவதாக வீரர்கள் முடிவு செய்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள் ளன. (ப-7)

## இன்று ஒரு தகவல்

# உச்சக் கட்டம்

ஒரு ஊரில் ஒரு இளைஞன் இருந்தான். அவனுக்கு வில்வித்தை கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆசை. கற்றுக்கொள்வது மட்டுமல்ல. "இந்த உலகிலேயே வில் வித்தையில் நம்மை மிஞ்சிய ஆள் வேறு யாரும இருக்கக் கூடாது" என்பது தான் அவனது ஆசை. பக்கத்திலுள்ள காட்டில் ஒரு குரு இருந்தார். வில் வித்தையில் சிறந்த கெட்டிக்காரர். நூறு அடி தூரத் தில ஒரு சிறிய இலையைக் குறிவைத்து அம்பு விடுவார். அம்பு அந்த இலையை சரியாக துளைததுக் கொண்டு போய் விடும். அவ்வளவு கெட்டிக் காரர்.

அவரிடம் இவன் போனான். " என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள். வில்வித்தை கறறுக் கொடுங்கள்" என்றான். அவர் சொன்னார் "முதலில் கண்களை மூடாமல் உன்னிப்பாகப் பார்க்கக் கற்றுக்கொள் அதன்பின் இங்கே வா" என்றார். இவன் திரும்பி வீட்டுக்கு போனான், வீட்டிலிருந்த தறியில் ஊடும்பாவும் நகர்வதை கண்சிமிட்டாமல் பார்த்துப் பழகிவிட்டான். இந்தப் பயிற்சி முடிவதற்கு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது.

அதன்பின் அந்தக் குருவைத் தேடிச் சென்றான். "கண் சிமிட்டாமல் பார்க்கக் கற்றுக்கொண்டேன " என்றான். "சரி இப்போது தான் நீ முதல் படியில் இருககிறாய். இனி மேல் பார்வையைக் கூர்மைப்படுத்திக் கொள். கண்ணுக குத் தெரியாத பொருள் கூடத் தெரிய வேண்டும். சிறு பொருளும் கூட உனது கண்ணுககுப் பெரிதாகத் தெரிய வேண்டும். இதையும் பழக்கப்படுத்திக் கொண்டு பிறகு வந்து என்னைப் பார்" என்றார்.

சரி என்று இவன் வீட்டுக்கு வந்தான். தோட்டத்தில் உள்ள ஒரு கண்ணுக்குத் தெரியாத சிறு பூச்சியை எடுத்து ஒரு புல் இதழில் வைத்தான். அதை வீட்டுக்குக் கொண்டு வந்து ஜன்னலில் தொங்க வைத்தான். தினமும் பூச்சியை உற்றுப்பார்க்க ஆரம்பித்தான். முதலில் பூச்சி சரியாகத் தெரியவில்லை. நாளாக ஆக அது பெரிதாகியது. இவனால் நன்கு பார்கவும் முடிந்தது.

அதன்பின் குருவிடம் வந்தான். கொஞ்ச நாளில எல்லா நுணுககங்களையும் கற்றுக் கொண்டான். வில் வத்தையில் நிபுணன் ஆகிவிட்டான். 300 அடி தூரத்தில உள்ள சிறிய இலையகைக் கூட சரியாகக் குறி வைத்து அம்பால் துளை போட்டான். ஒரு கோப்பையில் தண்ணீர் நிரப்புவது. அதை வலது முழங்கையில் வைத்துக் கொண்டு அம்பு எய்யும் போது கோப்பையில் உள்ள தண்ணீரும் சிந்தாது குறியும் தவறாது.

இனிமேல் அவன் சாதிக்க வேண்டியது எதுவுமில்லை. இருந்தாலும் அவனை மிஞ்ச ஆள் இருக்கக் கூடாது என்பதே அவனது குறிக்கோள். அதற்குத் தடையாக ஒருவர் இருக்கிறாரே. அவர் தான் கற்றுக்கொடுத்த குரு. அவர் இருக்கக்கூடாது என்று நினைத்தான். அவருக்குத் தெரியாமல் ஒரு அம்பை எடுத்துவிட்டான். ஆனால் அந்தக் குரு கண்ணிமைக்கும் நேரத்தில் பக்கத்திலிருந்த குச்சியை எடுத்து அம்பைத் தட்டிவிட்டு சீடனை அழைத்துச் சொன்னார்." அதோ பாரப்பா எனக்குத் தெரிந்ததெல்லாம் உனக்குக் கற்றுக் கொடுத்துவிடடேன். என்னை விடப் பெரிய குரு ஒருவா இருக்கிறார்.அதோ அந்த மலை உச்சியில் உளளார். அவரிடம் நீ கற்க வேண்டியது நிறைய உள்ளது" என்று கூறி அவனை அனுப்பி வைத்தார்.

உடனே சீடன் அந்த குருவிடம் சென்றான். "நான் வில் வித்தையில் கெட்டிக்காரன் தானா என்று எனக்குத் தெரிய வேண்டும் என்றான். அந்தக் குரு கேட்டார் "சரி அதைத் தெரிந்து கொள்ளலாம். உனது வில், அம்பு இவை இரண்டும் இல்லாமல் குறிவைக்க முடியுமா?" என்றார். இப்படிக் கேட்டுவிட்டு அவனை ஒரு மலை உச்சியின் விளிம்புக்குக் கொண்டு போய் நிறுத்தினார். எட்டிப் பார்த்தால் கீழே பயங்கரமான பாதாளம் அவனுக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது. அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு கீழே உட்கார்ந்து விட்டான்.

இப்போது அந்த குரு சிரித்துக் கொண்டே "வில்வித்தை என்றால் என்னவென்று பார்" என்றார். "உங்கள் வில் எங்கே?" என்றான். ' வில்லா அது எதற்கு? ' வில்லும் அம்பும் தேவைப் பட்டால் நீ இன்னும் ஆரம்ப நிலையில் இருக்கிறாய். உண்மையான வில்வித்தைக்கு அவையிரண்டும் தேவையில்லை என்றார். ஒன்பது ஆண்டுகள் அவரிடம் இருந்தான். அதன்பின் ஆணவம் அவனிடமில்லை. பழைய குரு இவனை வந்து பார்த்தார்." நீ இப்போது நிபுணன் ஆகிவிட்டாய். உன் காலகளைத் தொடக் கூட நான் அருகதையற்றவன்" என்றார்.

யாராவது வில்வித்தை பற்றிக் கேட்டால் அவன் சொல்வான். பேச்சின் உச்சக் கட்டம் மௌனம். செயலின் உச்சக்கட்டம் செயலின்மை வில்வித்தையின் உச்சககட்டம் வில்லை எய்தாமல் இருப்பது தான் என்பான். அதன்பின் அவனது புகழ் எங்கும் பரவியது.

ஒருநாள் ஒரு நண்பன் வீட்டுக்குப் போயிருநதான். அங்கே இவனுக்குப் பழக்கப்பட்ட பொருள் ஒன்று இருந்தது. அதைப் பார்த்தான். அது என்னவென்று இவனுக்கு நினைவுக்கு விரவல்லை. யோசித்துப் பார்த்துவிட்டு அந்த நணபனிடமே கேட்டானாம் அது என்ன? "அதை ஏன் இங்கே வைத்திருக்கிறாய்?" என்று கேட்டிருக்கிறான்." நீ வில் வித்தையில் சிறந்த நிபுணன். அதனால்தான் அது என்னவெனபதை மறந்துவிட்டாய என்றானாம்" இதுதான் நிபுணத்துவத்தின் உச்சநிலை.

நாம் அன்றாட வாழ்வில் பல விடயங்களை மறந்து விடுகிறோம். அதனால் அவற்றில் நிபுணத்துவம் அடைந்து விட்டோம் என்று அர்த்தமில்லை நமது ஆள் ஒருவன் தன் வீட்டில் தாயிடம் கேட்டான்." அது என்னம்மா? என்னவோ குச்சிமாதிரி இருக்கிறது. நமது வீட்டில் என்னைத் தவிர எல்லோருமே அதைத் தினமும் உபயோகப்படுத்துகிறீர்கள்?" என்று கேட்டான். " அது தான் பேஸ்ட் பிரஷ். பல் விளக்குவதென்று ஒரு காரியம் உண்டு. அதைச் செய்வதற்காக உபயோகபபடுத்தும் பொருள் அது"

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால்

# அரசு வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

ஆட்சிப்பீடமேறிய குறுகிய காலப் பகுதிக்குள் சர்வதேச மட்டத்திலான பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தாலும் வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் திடசங்கற்பம் பூணவேண்டுமென மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்திற்குள் அத்தியாவசியப் பொருட்களின் விலையதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

இதனால் வறிய மற்றும் நடுத்தரவர்க்க குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் எரிபொருள் உரமானியங்களை வழங்கி அனைவருக்கும் நன்மை பயக்கும் வழி முறைகளை கையாண்டது வரவேற்கத்தக்கது.

எனினும் பாதிக்கப்பட்டவர்கள் கூடுதலான பயனடையும் புதிய முறையை வகுக்க வேண்டும்.

இதேவேளை எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வு காணும் மாற்றுவழி முறைகளை கண்டறிவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும்.

அத்துடன் கூடுதலான எரிபொருள் பாவனையையும் கட்டுப்படுத்த வேண்டும் என்றுள்ளது. (க-60)

# பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## அமெரிக்கத் தூதுவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினரின ஒத்துழைப்புடன் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்கள் நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை இல்லாதொழிக்கும் அபாயம் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லம்ஸ்டெட்டிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

சமாதான முயற்சிகள் தொடர்பில் ஜனாதிபதி கொண்டுள்ள இரட்டை நிலைப்பாடு மற்றும் அவரால அடிக்கடி வெளியிடப்படும் தெளிவற்ற, முரண்பாடான கருத்துக்கள் என்பவற்றை தாங்கள் அமெரிக்கத் தூதுவரிடம் விரிவாக விளக்கியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளிக்கவென நியமிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திரக் குழு நேற்றுமுன்தினம் முற்பகல் அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், செல்வம அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் அடங்கிய குழுவினரே அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்துக கலந்துரையாடினர்.

தேக்கமடைந்து காணப்படும் சமாதான முன்னெடுப்பினை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு அமெரிக்கத் தூதுவருக்கு இவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ற-121)

## இராசி பலன்

**02.10.2004**

**(புரட்டாதி 16, சனிக்கிழமை)**

**சதுர்த்தி முற்பகல் 8.48மணிவரை**

**பரணி முற்பகல் 7.40 மணி வரை**

**இராகு காலம் 9.02 -10.32 மணி வரை**

**சுப நேரம் 3.02-4.32 மணி வரை**

**கார்த்திகை விரதம்.**

**சங்கட ஹர சதுர்த்தி விரதம்.புரட்டாதிச் சனி**

**மேடம்**
வாக்கு மேன்மை, நண்பர்கள் சந்திப்பு, பிரயாணம், பண விரயம்

**இடபம்**
சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, தொழில் சிந்தை, ஆரோக்கியம்

**மிதுனம்**
வேலைப்பளு, பண விரயம், உறவினர் மனஸ்தாபம், காரிய சிந்தை

**கடகம்**
எடுத்த காரியம் கைகூடும், நல்ல வரவேற்பு, பணவருவாய், தெய்வசிந்தை

**சிங்கம்**
உற்சாகம், நல்ல செய்தி, புதிய முயற்சி, போசன நன்மை

**கன்னி**
கட்டுப்பாடு, சரீரப் பிரயாசை, வீண் பயம், பிதா சிந்தை

**துலாம்**
வாகன பயம், வீண் பிரச்சினை, காரிய தடங்கல், பண க்கஷ்டம்

**விருச்சிகம்**
களஸ்திர நன்மை, பெருமையான சம்பவம், காரிய அனுகூலம், பண வருவாய்

**தனுசு**
தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல செய்தி, தொழில் நன்மை, விருந்துபசாரம்

**மகரம்**
வியாபார சிந்தை, தாழ்ந்த சுபாவம், உறவினர் சந்திப்பு, சிறு வியாதி

**கும்பம்**
தாய் வழி உறவு, மனச்சஞ்சலம், காரிய தாமதம், பண விரயம்

**மீனம்**
நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, தொழில் விருத்தி, நண்பர்கள் உதவி

*பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது. -வளவன்*

# அண்மைய படுகொலைச் சம்பவங்களுக்கு இரா. சம்பந்தன் எம்.பி. கண்டனம்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் அனைத்துக் கொலைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். படுகொலைகள் தொடர்ந்து இடம்பெறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் நிராயுதபாணி உறுப்பினர்கள் கொல்லப்படுவதை இனியும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கை குறித்து ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக நாட்டில் பரவலாக இடம்பெற்று வரும் படுகொலைகள் குறித்து பலதரப்பினரும் முறையிட்டு வருகின்றனர். தமிழீழ விடுதலைப்புலிகளும் தங்களுடைய உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டு வருகின் றார்கள் என முறையிட்டிருக்கின்றார்கள்.அதனை விட ஏனைய அரசியல் கட்சிகளும் இது தொடர்பில் முறையிட்டிருக்கின்றார்கள்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில்தான் கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவ்விடயம் சம்பந்தமாக அரசாங்கம் கவனயீனமாக உள்ளது.

அனைத்துப் படுகொலைகளும் உடன்நிறுத்தப்பட வேண்டும். இக்கொலைகளை ஒரு சமுதாயம் ஒருபோதும ஏற்றுக்கொள்ளாது.

கொலைகள் சம்பந்தமாக பல்வேறு தரப்பினரால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் பதிலளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-121)

# ஆளுநர் விருதுக்காக இம்முறை எண்மர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டக் கலைஞர்கள் நால்வர் உள்ளடங்கலாக வடக்கு-கிழக்கு பகுதிகளிலிலுள்ள 8கலைஞர்களுக்கு இம்முறை ஆளுநர் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஆளுநர் விருதுக்காகத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர் விபரங்களை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் வெளியிட்டுள்ளார்.

ஆளுநர் விருதுக்காக இம்முறை குழந்தை ம.சண்முகலிங்கம்(யாழ்ப்பாணம்), மு. கனகசபை (யாழ்ப்பாணம்), பி.ஸ்ரானிஸ்லாஸ்(யாழ்ப்பாணம்), இரா. சடாட்சரதேவி(குந்தவை)(யாழ்ப்பாணம்), அரியான் பொய்கை கை.செல்லத்துரை (முள்ளியவளை), வயிரமுத்து சிவசுப்பிரமணியம் (மட்டக்களப்பு), கே.எஸ். சிவகுமாரன் (மட்டக்களப்பு),ஜனாப் எஸ். எல். எம். ஹனீபா(ஓட்டமாவடி)ஆகியோர் தெரிவு செய்யபபட்டுள்ளனர்.

இவர்களுக்கான விருதுகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் 9ஆம் திகதி முதல் 3தினங்கள் நடைபெறவுள்ள தமிழ் இலக்கிய விழாவின் நிறைவு நாள் விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (ற-5)

# 2004 ஆம் ஆண்டிற்கான சாகித்திய மண்டலப் பரிசில்கள் பெறுவோர் விபரம்

(கொழும்பு)

இந்த ஆண்டிற்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசில்களுக்காக தெரிவு செய்யப்பட்டவா களின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு முதல் தடவையாக வெளியிடப்பட்ட படைப்புக்களை உருவாக்கியோர் மத்தியல் இருந்து இந்த இலக்கியவாதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன

இலங்கைக் கலைக்கழகம், தமிழ் இலக்கியக் குழு இந்தத் தெரிவுகளை மேற்கொண்டுள்ளன.

அந்தத் தெரிவுகளின் அடிப்படையில்,

''இருத்தலுக்கான அழைப்பு'' என்ற நூலை எழுதிய முல்லை முஸரிபா கவிதைக்கான பரிசைப் பெறவுள்ளார்.

''தரை மீன்கள்'' என்ற சிறுகதையை எழுதிய எஸ்.முருகானந்தன் கௌரவிக்கப்படவுள்ளார்.

''வானம் கனல் சொரியும்'' என்ற நாவலை எழுதிய செங்கை ஆழியானுக்குப்பரிசு வழங்கப்படவுள் ளது.

''வெள்ளைக் குதிரை'' என்ற நூலை ஆக்கிய ஓ. கே.குணநாதன ''சிறுவர் இலக்கியப் பரிசைப'' பெறவுள்ளார்.

சி.வி.வேலுப்பிள்ளை எழுதிய ''தேயிலைத் தேசம்'' என்ற ஆங்கில நூலை தமிழாக்கம் செய்தமைககாக மு.சிவலிங்கத்திற்கு பரிசு வழங்கப்படவுளளது.

சிறந்த ஆய்வு நூல்களை எழுதியமைக்காக ''மலையகத் தமிழர் வரலாறு'' என்ற படைப்பின் மூலகர்த்தாவான சாரல்நாதனுக்கும், ''மின்னியக்கப் பத்திரிகையில் ஓர் அறிமுகம்'' எனற ஆக்கத்தை உருவாக்கியவரான அருள்திரு ரூபான்மரியாம்பிள்ளைக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(க-60)

# தமிழ் இலக்கியப் பெருவிழா ஆய்வரங்கு நிகழ்வுகளில்...

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு நடத்தும் தமிழ் இலக்கியப் பெருவிழாவின் ஆய்வரங்க நிகழ்ச்சிகள் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 3 நாட்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தினமும் காலையில் இடம்பெறவிருக்கின்றன.

முதலாம் நாள் அமர்வான எதிர்வரும் 9ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 10. 00 மணிவரையும் ''டாக்டர் சிறின் அரங்கில்'' கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.மௌன குருவின் தலைமையில் இடம் பெறும் ஆய்வரங்கில், ''மேல்நாட்டவர் வருகைக்கு முன்னர் நிலவிய கல்வி சார் அறிவிலக்கியப் பாரம்பரியம்'' எனும் விடயத்தில் கலாநிதி க.ரகுவரனும், போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலங்களில் கல்வி சார் அறிவியல்சார் நூல்கள் எனும் விடயததில் ஈஸ்வரநாத பிள்ளை குமரனும், ''பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் மிசனறிகளின் செயற்பாடு'' எனும் விடயத்தில் வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளும் ஆய்வுரை வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் 10ம் திகதி ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அரங்கில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறும் ஆய்வரங்கில் பேராசிரியை சந்திரலேகா மௌனகுரு ''பாடநூல்களில் பெண்கள்'' எனும் விடயம் பற்றியும்,

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ''நாவலர் கல்வி முறை'' எனும விடயம் பற்றியும் கலாநிதி செ.யோகராசா ''1900-1950 காலப் பகுதியில் பாடப் புத்தகஙகள், துணைப் பாடப் புத தகங்கள்'' எனும் விடயம் பறறியும் பேராசிரியர் சபாஜெய ராசா ''தமிழ் மொழிக்கல்வி-மொழி பெயர்ப புகள் கலைச் சொல்லாக்கம்'' எனும் விடயம் பற்றியும் ஆய்வுரை வழங்குவர்.

எதிர்வரும் 11ம் திகதி பேராசிரியர் கா.சிவதம்பி தலைமையில் இடம்பெறும் ஆய்வரங்கல் பேராசிரியர் சோ.சந்திர சேகரன் ''தமிழ்மொழிக் கல்வியியல் எழுத்துககள்'' எனும் விடயம் பற்றியும் செம்பியன்செல்வன் ''கல்வயில் நோக்கு -நவீன போக்குகள்'' எனும் விடயம் பற்றயும் ஜனாப்ரமிஸ் அப்துல்லா ''கல்வி சார் இஸ்லாமிய-அரபு பாடநூல்கள் சில அவதானங்கள்'' எனும் விடயம் பற்றியும் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளனா்.

(ந-5)

# ஜே.வி.பி. பறித்த அ.அட்டைகளை மக்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும் ஐ.தே.க. கட்சி கோரிக்கை

(கொழும்பு)

ஜே.பி.வி.யினரால் 1989 ஆம் ஆண்டு பொது மக்களிடம் இருந்து பறித்துச் செல்லப்பட்ட அடையாள அட்டைகளை மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினா மனோ விஜயரட்ண கோரிக்கை விடுத்துள்ளார்.அவர் இது தொடா பாக விடுத்துள்ள அறிக்கை யில்,

ஜே.வி.பி.யினர் தாம் பறித்துச சென்ற அடையாள அட்டைகளை மக்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு அவர்கள் அந்த அடையாள அட்டைகளைத் திரும்ப ஒப்படைப்பார்களானால், நாட்டில் தற்சமயம் சுமார் 30 சதவீத வாக்காளர்களுக்கு இலலா மல இருக்கும் அடையாள அடடைகளின் ஒரு தொகுதியையாவது பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிபபிடப்பட்டுள்ளது. இதேவேளை, நாட்டில் உள்ள சகல வாக்காளர்களுக்கும் அடை யாள அட்டைகளை பெற்றுக் கொடுக்க குறைந்தது 12வருடங்க ளாவது செல்லும் எனவும் அவா மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-121)

# ஈழத்தமிழ் அகதிகள் இருவர் தாயகம் திரும்பினர்

இந்தியா, தமிழ்நாடு அகதி முகாம்களில் தங்கியிருந்த இரு ஈழத்தமிழ் அதிகள் நேற்றுமுன தினம் இந்திய மீன்பிடிப் படகுகள் மூலம் தாயகம் திரும்பினர்.

தமிழகம் திருவள்ளுவர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அகதி முகாமிலிருந்தும், யோம்பூத்தூர்- மேடடுப்பாளையம் அகதி முகாமலிருந்தும 2 பெண் ஈழத்தமிழ் அகதிகள இராமேஸ்வரம் வழியாக மீனவர்களின் படகு மூலம் மன்னாரை வந்தடைந்தனர். மன்னாரில் பொலிஸாரினால கைது செய்யப்பட்ட இவர்கள், மன் னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட னா. இவர்கள் தமது சொந்த இடங்க ளான யாழ்ப்பாணம் அச்சு வேலிக் கும் வவுனியா மகாரம்பைக்குளத் திற்கும் மன்னார் அரச செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

(ந)

# 2005 ஏப்ரலில் தேர்தல் ஐ.தே.க. பெரு வெற்றியீட்டும்

## ராஜித சேனாரத்ன எம்.பி. எதிர்வுகூறல்

(கொழும்பு)

2005-ஏப்ரலில் அடுத்த பொதுத தேர்தலுக்கு தயாராகுமாறு மககளைக் கேட்டுக் கொள்வதாக ஐ.தே.க.வின் எம்.பி. ராஜிதசேனாரத்ண கூறியுள்ளார். அத்துடன் அடுத்தாண்டின் மார்ச் மாதம் வரையில் எதிர் கட்சிக்கு பலர் கட்சிமாறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மொறட்டுவவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேராசிரியர் பீரிஸ் இன் முன்னுதாரணத்தை பின்பற்றி மேலும் பலா எதிர்க்கட்சிக்கு வரும்போது தொண்டமானும் அவ்வாறே செயவார். நடைபெறும் தேர்தலில் ஐ.தே.க. பெறும் வெற்றியுடன் அமையும் அரசாங்கத்தை மேலும் 20 ஆண்டுகளுக்கு அசைக்க முடியாது என்றும் ராஜிதசேனாரத்ன கூறியுள்ளார்.

()

# தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் விபரம் வருமாறு:-

இ.ஜதுஷன்-169, கா.சௌமி-162, ஸ்ரீ.அச்சுதை-158, வே.வரஜீவி-158,ம.கிருஸ்னி -155, இ.லக்ஷியா-153, தி.மது சோபிகா- 152, ரு.ஹம் வாகினி- 149, பா. கஜானா-149,க.லாவண்யா - 148, சு.சிவதர்ஷன-145,பா.ரூபினி- 145,ச.சாருஜன்-142,க.ஜசிந்தா-141,சு.தனுஷியன்-141, வி.ஜியானி-140, ஜெ.யதுராஜ்-139,இ.ஜானுதி-138, இ.ரங்கதீபிகன்-137, ஸ்ரீ.மிதுலா-136, க.திலக்ஷி-136, ந.முரளிகிஸ்ணா- 135,ஸ்ரீ.திவ்ஜா-135,பா.லக்ஷனா-135,ர.கஜிந்-134, சி.வேணுஜா-134, சி.சிவானுஜன்-134,செ.கலீபன்-133, த.வைகுந்தன்-132,த.சாமந்தி-132,வ.விநதியா-131, பி.செந்தூரன்-130, ம.வஸ்மிலா-130, இ.சங்கீர்தனா- 129,வ.வவிசன்-128, செ.ஹரிநாத்-128,நி.கோபி-126, தி.தவலக்ஷன்-125, ஆ.சித்பவி-125, ம.றொசாந்தன்-125, ம.கீர்த்தனா-125,

**கெருடாவில் இந்து கலவன் பாடசாலை**

ச.கஜீபா-143,தி.கஜரூபனா-135,ப.மிதிலா-135,தி.விஜிதா-130,ச.நிலாமினி-130.

(ந-100)

# எதிர்க்கட்சித் தலைவர் ரணில் 10ஆம் திகதி இந்தியா பயணம்

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில்விக்கிரம சிஙக எதிாவரும் 10ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவிற்குச் செல்லவுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பினை அடுத்தே, இப்பயணம் அமையவுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவ் விஜயத்தின் போது, இலங்கையின் சமாதான முயற்சிகளின் பின்னடைவு மற்றும் சமாதான நடவடிக்கைகளின் எதிாகாலம என்பன குறித்து இந்தியத் தலைவர்களுடன் எதிர்க் கட்சிததலைவர் விளக்கமளிப்பதுடன், இது குறிததும விரிவாக பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இதேவேளை, எதிர்க் கட்சித தலைவரின் இந்தியப் பயணத்திற்கு ஏற்பாடு செய்யும் முகமாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினா் மிலிந்தமொறகொட இந்தியா பயணமாகியுள்ளார்.

இப பயணத்தின் போது மிலிந்த மொறகொட இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் டி.என். டிகஸிற உட்பட இந்திய அதிகாரிகள் பலருடனும் பேச்சுவார்த்தை நடாத்துவார் எனத் தெரியவருகின்றது.

(ந-121)


## யாழ்ப்பாணம்–மாநகரசபை

## கள்ளியங்காடு சந்தைக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல்-2004

மாநகரசபைக்குச் சொந்தமான கள்ளியங்காடு சந்தையில் புதிதாகச் சபையால் அமைக்கப்பட்டுள்ள கடைகளை இலங்கைப் பிரஜைகளிடமிருந்து குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்.மாநகர ஆணையாளராகிய என்னால் 22.10.2004ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.00மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பட்டுள்ள மீளளிக்கப்படக்கூடிய கேள்விப பணைப் பணம் ரூபா 10,000 /=ம், மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 1000/=ம் பெறுமதி சேர்வரி(vat) ரூபா150/= (15%)உம் செலுத்துவதன பெயரில் 21.10. 2004ம் திகதி வியாழக்கிழமை பி.ப.12.00மணிவரையும் மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான விண்ணப்பப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் கேள்விப் பத்திரம் பெறவரும் போது அவர்களுடைய தேசிய அடையாள அட்டையினை கொண்டு வருதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை இதற்கென வைக்கப்பட்டுள்ள கேளவிப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ''ஆணையாளர், மாநகரசபை, யாழ்பபாணம'' என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்ட உறையிலிட்டு இடது மேல் மூலையில் ''கள்ளியங்காடு சந்தைக்கடை குத்தகை'' எனக குறிப்பிட்டு 22.10.2004ம் திகதி வெள்ளிககிழமை பி.ப.2.00மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 22.10.2004ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணக்கு கேள்விச்சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்க முடியும். எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

தங்களால் கோரப்படும் கேள்விக்கு மேலதிகமாக 15 % பெறுமதிசேர்வரியும் சேர்த்து செலுத்தல் வேண்டும்.

| கடைகள் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதிசேர்வரி (vat) தவிர்த்து) |
|---|---|
| 1.கீழ் தளக் கடைகள் (கடை ஒன்றுக்கு) | 360,000/= |
| 2.முதலாம் மாடிக் கடைகள் (கடை ஒன்றுக்கு) | 180,000/= |

திகதி:-01.10.2004.

ஆணையாளர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(c-601)

# குடாநாட்டில் இடம்பெற்ற சிறுவர்தின நிகழ்வுக்காட்சிகள்



தமிழர் புனர்வாழ்வு நிறுவனமும், வடக்கு,கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம் பாட்டு நிலையமும் இணைந்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடாத்திய சிறுவர்தின நிகழ்வில் இடம்பெற்ற சிறுவர்களின் நிகழ்வையும், இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



கைதடி அரச சிறுவர் இல்லத்தில் மகிழ்ச்சி யுடன் விளையாடும் சிறுவர்களைப் படத்தில் காணலாம்.




யாழ்ப்பாண பொது நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ் வில் கலந்துகொண்டவர்களையும், சிறுவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துவதையும் படங்களிலீ காணலாம்.
படங்கள்:- அலுவலக நிருபர்

# வனப்பும், வளமும் நிறைந்த எம்மண்ணில் சுதந்திரமாக வாழ விரும்புகிறோம்

## சிறுவர்கள் கையெழுத்திட்டு யுனிசெப்பிற்கு மகஜர்

வனப்பு நிறைந்த எம் மண ணில வாழ்கின்ற சிறுவர்களாகிய நாம் ஒவ்வொரு வரும் உரிமை யுடன், உணர்வுடனும் தேசப் பற்றுடனும் உயர எண்ணுகிறோம். எமது வளமான பாடசாலைகள், வனப்பான இருப்பிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு எமது உணர்வுகள் அடக்கப்பட்டு எமது உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம் பாட்டு நிலையத்தின் சிறுவர் களால் யுனிசெப் அமைப்பிடம் நேற்றைய தினம் நல்லை ஆதீன மண்டபத்தில் வைத்து அனுப் பிவைக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடபபட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச சார் பற்ற நிறுவனங்களின் இணை யத் தலைவர் வி.ஸ்ரீ சக்திவேல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட இம் மகஜரில் மேலும் தெரிவிக் கப் பட்டிருப்பதாவது,

முன்பள்ளிகளில் பயில்கினற சிறுவர்களால் கையொப்பமிடப பட்டு கையளிக்கப்பட்ட அம் மக ஜரில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

உலக சிறுவர் தினமாகிய இன்றைய நாளில் தமிழ் சிறு வர்களாகிய நாம் அரசிடமும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதி யத்திடமும் கேட்டு நிற்பது யாதெ னில் உலக சிறுவர்கள் அனுப விக்கும் சுதந்திரம் போல் எமக்கும் வேண்டும்.

எமது அன்றாட வாழ்வியல் நடத்தைகள் வேண்டுமென்றே சீர்குலைக்கப்படுகின்றன. திட்ட மிட்டு திணிக்கப்படும் கலாசாரச் சீரழிவும் தீய பழக்கங்களும் முற்றாக நிறுத்தப்பட வேண் டும். நாம் நேசிக்கும் மண்ணை யும் நாம் நிகழ்த்தவுள்ள சாத னைகளையும் மறைமுகமாக அழிக்கும் தீயசக்திகளை இனம் காண்பதும் அவற்றை எமக்கு தெளிவுபடுத்துவதும் மண் மீது பற்றுக் கொண்ட எம் மூத்தோர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

எங்களை பாகுபாடு காட்டி ஒதுக்காமல் எங்கள் உயிர்வாழ தலையும் மேம்பாட்டையும் மதித்து எங்கள் கல்வியில் அக கறை கொண்டு கௌரவமான பாதுகாப்பான வாழ்விற்கு வழி செய்யுங்கள்.

எங்கள் பாடசாலைகளை முட்கம்பிகளுக்குள் முடக்கி காவலரணாக்கி ஆக்கிரமித்து வைத்திருப்பதையும் எங்கள் வீட்டுப் படலையில் ஆமிக்காரன நிற்பதையும் எங்கள் அப்பா எங் கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதைத் தடுப்பதையும் நாங் கள் சுரண்டப்படுவதையும் இரா ணுவத்தால் தொடர்ந்தும் சித்திர வதைக்குள்ளாவதையும் சிறுவர் களாகிய நாம் ஏற்றுகொள்ள வில்லை.

சிறுவர் உரிமைகளை பாது காகக உலகளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத் தால் உருவாக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியம் எம்மையும் பாதுகாக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தின் அனுசரணையுடன நடாத் தப்படட உலக சிறுவர் தின நிகழ்வு புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்ட இணைப்பாளர் இ. ஜெய ராஜா தலைமையில் இடம் பெற்ற சமயம் ஆயிரக் கணக் கான சிறுவர்களும் நூற்றுக் கணக்கான ஆசிரியாகளும் பங்கு கொண்டிருந்தனர். (ப-16)

# கசிப்பு உற்பத்தி தொடர்பில் ஐவருக்கு ஒரு இலட்சத்து 28 ஆயிரம் ரூபா அபாரதம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தி தொடர் பாகக் கைதுசெய்யப்பட்ட 5 பேருககு யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஒரு இலட்சத்து 28 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

கசிப்பு உற்பத்தி செய்தமை மற்றும் இதற்கான உபகரணங் கள் வைத்திருந்தமை தொடர் பாக நேற்று முன்தினம் மது வரித் திணைக்கள பரிசோத கரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி இ.த.விக்னராஜா சம்பந்தப்பட்ட இருவ்ருக்குத் தலா 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5 ஆயி ரம் ரூபா தர்மப்பணமும் விதித் ததுடன், மற்றைய இருவருக் குத் தலா 30 ஆயிரம் ரூபா தண் டப்பணமும் 10ஆயிரம் ரூபா தர்மப்பணமும், ஏனைய நப ருக்கு 15 ஆயிரம் ரூபா தண் டப் பணமும் 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் அபராதமாக விதித்தார். (ந-5)

# அப்துல் காதரின் விளக்கமறியல் ஆறாம் திகதிவரை நீடிப்பு

(கொழும்பு)

மோசடிக்குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அப்துல் காதரின் விளக்கமறியல் எதிர் வரும் 6ம் திகதிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

கொழும்பு நீதிமன்றில் அப் துல் காதர் கடந்த புதன்கிழமை ஆஜரானபோதே நீதிவான் இதற்கான உத்தரவினைப் பிறப் பித்தார். நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதிக் குமாறு அவரது சட்டத்தரணி கோரியபோதும், நீதிவான இதற்கு அனுமதி மறுத்ததுடன், விளக்க மறியல் காலத்தை நீடிக்குமாறும் உத்தரவிட்டார். (ந-8)

# மின்கட்டணங்கள் மீண்டும் அதிகரிக்கும

மின்சாரக் கட்டணங்கள் மீண் டும் அதிகரிக்கும் நிலை ஏற் பட்டுள்ளதாக விவசாயக் கால் நடை வளர்ப்பு காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அநுர குமாரதிஸ்ஸநாயக்க தெரி வித்துள்ளார். கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம ஒன்றில் கலந்து கொண்டு உரை யாற்றும போதே அமைச்சர் இந் தக் கருத்தினைத் தெரிவித்தார்.

அரிசியின் விலை உயர்நதுள் ளமையைச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், மின்சாரக் கடடணங் களும் வெகுவிரைவில் அதிகரிக் கும் எனத் தெரிவித்தார்.

காஸசிலிண்டர்கள் காட்சிப் பொருட்களாக மாறிவிட்டதர்கக் குறிப்பிட்ட அவர், காஸ்சிலிண்டர் களை வைத்துக்கொண்டு விறகு அடுப்பில் சமையல் செய்கின்ற இக்கட்டான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் எனவும தெரிவித்தார். (ந-121)

# ஒன்றரைக் கிலோ போதைப்பொருள் சுங்க அதிகாரிகளால் மீட்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து பெண் ஒருவரால் குவைத் நாட்டுக்குக் கடத்திச் செல்லப்படவிருந்த ஹெரோயின் போதைப் பொருட் களை நேற்று முன்தினம் நண் பகலளவில் கட்டுநாயக்கா சர் வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பிரிவு அதிகாரி கள் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் ஒன்றரைக் கிலோ நிறைய்டைய இந்தப் போதைப் பொருள், 40 இலட்சம் ரூபா பெறு மதியுடையது என சுங்க அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, குறிப்பிட்ட பெண் போதைப்பொருள் என நம்பப்படும் ஒன்றரைக் கிலோக் கிராம் வில்லைகளையும் கையு றைக்குள் மறைத்துக் கொண்டு சென்றமை கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

இந்தக் குறிப்பிட்ட வில்லை ஒன்று கொழும்பு நகரில் 2 ஆயி ரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. (ந-8)

## உலக குடியிருப்பாளர் தினம்

(யாழ்ப்பாணம்)

ஒக்டோபர் 4ஆம் திகதி உலக குடியிருப்பாளர் தினம் கொண்டாடப்பட உள்ளது. இத தினத்தை ஒட்டி இவ்வருட தொனிப்பொருள் ‘கிராம அபி விருத்தியின சக்தி - நகரமாகும’ என்பதாகும்.

உலக சனத்தொகையின் 50 சதவீதமானோர் நகர்ப்புறத் தில் வாழ்கின்றனர். இத்தி னத்தை ஒட்டி மாகாண சபைகள உள்ளூராட்சி அமைச்சு மற்றும உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிய வற்றின் பங்களிப்பு மூலம் நகரங்களிலும், கிராமங்களி லும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்தினத்தை ஒட்டி யாழ். மாநகர சபையும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள உள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. (ந-5)

## தலைமைத்துவப் பயிற்சியின் நிறைவுநாள் நிகழ்வுகளும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக் களத்தின் அனுசரணையுடன் கரவெட்டிப் பிரதேசசெயலர் பிரி வினால் நடாத்தப்படும் கிராமிய மட்ட அமைப்புக்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி யின் நிறைவு நாள் நிகழ்வுக ளும் சான்றிதழ் வழங்கும் வைபமும் இன்று பி.ப. 4மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண டபத்தில் நடைபெற உள்ளன.

கரவெட்டிப் பிரதேச செயலா சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபா செ. பத்மநாதன் பிரதம விருத் தினராகவும், வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைககள உதவிப் பணிப்பாளர் வி. குமாரசிங்கம் சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர். (ந)

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரிய சங்க யாழ். மாவட்ட கிளையின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற் றுககிழமை காலை 10 மணிக்கு கொக்குவிலில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள் ளது.

கொழும்பில் ஆசிரிய தின ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொள்ள சம்மதித்தவர்கள் தங்கு வதற்கு இக்கிளையினால் வச திகள் செய்யப்பட்டுள்ளன. எனவே தமது வருகையை உறுதிப்ப டுத்தி போக்குவரத்து ஒழுங்கு களை அறிந்துகொள்ள தவறாது இப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட டுள்ளார். (ந)

## திருடர் கைவரிசை

மட்டுவில் மகாவித்தியால யத்திற்கு அருகில் உள்ள பலசரக்குக்கடையும், சலவைத் தொழில்கமும் கடந்த செவ் வாய்கிழமை இரவு உடைக்கப் பட்டு திருடப்பட்டுள்ளன.

அ. ராஜசேகரனின் பலசரக் குக் கடையில் பல்லாயிரக் கணக்கான பொருள்களும் இ.விநாயகமூர்த்தி என்பவரின் சலவைத் தொழிலகத்தில் இருந்து ஸதிரிக்கை பெட்டி களும, பெறுமதியான உடு புக்களும் திருடப்பட்டு உள்ள தாக தெரியவருகின்றது.(ந-36)

## ஊழியர் பற்றாக்குறை

(வட்டுக்கோட்டை)

சுழிபுரம் அஞ்சல் அலுவல கத்திற்கு மூன்று தபால் அதி பர் தேவையுள்ள இடத்திற்கு ஒரு தபால் அதிபர் மாத்திரமே கடமையில் இருப்பதாகவும் இங்கு ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (ந-39)

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு - குறள்

வலம்புரி

# வரலாற்றுப் பதிவுகளை ஆவணப்படுத்த வேண்டும்

ஓர் இனம் த[illegible]து [illegible]மைகளை முன்மொழிய வேண்டுமாயின் [illegible]ம் தனது வரலாற்றுப் [illegible]திவுகளை சான்[illegible]தாரப்படுத்துவது மி[illegible]வும் அவசியமாகும்.

எனினும், இது விடயத்தில் ஈழத் தமிழினம் தவறிவிட்டது என்றே கூறவேண்டும். தமிழினத்தின் தொன்மை பற்றியும் அந்த இனத்தின் ஆட்சி பற்றியும் வெறும் வார்த்தைகளால் பேசிக்கொள்வது என்பது நீண்டகாலத்திற்கு உகந்ததாக இருக்க மாட்டாது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இங்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்கள் மற்றும் தென்னிலங்கை மக்களுக்கு எமது பெருமைகளை சான்றாதாரத்துடன் காட்டுவதற்கு எந்த வித தொல்லியல் காப்பகங்களும் இல்லாதிருப்பது பெரும் குறைபாடாகும்.

நல்லூர் மன்னன் சங்கிலியனைப் பற்றி பேசுகிறோம். அவனின் பெருமைகளை பேசுகின்றோம். ஆனால் அவனின் அரண்மனையை - மந்திரிமனையைப் பாதுகாத்து இதுவல்லோ நம் தமிழ் மன்னன் சங்கிலியனின் ஆட்சிக்கால சான்றுகள் எனக் கூற முடியாதவர்களாக இருக்கிறோம் எனில் அங்கு இருக்கக்கூடிய தவறுகள் பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

ஆம், வெறும் வார்த்தைகளால் பெருமை பேசுவதில் காலம் கழித்த நாம், இனிமேலாவது எமது இனத்தின் தொன்மைச் சான்றுகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். ஏனோ தானோ என்ற நிலையில் கவனிப்பாரின்றி அழிந்துபோன சங்கிலி மன்னனின் மந்திரிமனை இருக்கின்ற எச்சத்துடனாவது காப்பாற்றப்பட வேண்டும்.

அதேபோல் இன்று ஈழத் தமிழர்கள் தமிழைப் பேசுகின்றார்கள் எனில் அந்நியர் ஆட்சிக் காலத்திலும் தமிழினம் தனது முகவரிகளை தொலைத்து விடாமல் பாதுகாத்ததெனில் அதற்கு காரணமாக இருந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே.

ஆனால் அவர் பற்றிய பேச்சுக்கள் எம் மத்தியில் இருக்கின்றபோதிலும், அவர் வாழ்ந்த இடம்; அவர் வசித்த வீடு; அவர் பயன்படுத்திய உபகரணங்கள் இவையேதேனும் பாதுகாக்கப்பட்டனவா என்றால் இல்லையென்பதே விடையாக இருக்கும்.

தமிழ் மொழியைப் பாதுகாத்த ஒரு பெரியவரின் நினைவுச் சின்னங்களை பாதுகாக்கத் தவறிய [illegible]ாம், அதற்கு அப்பால் நல்லூர் முருகன் ஆலய முன்வீதியில் நிறுவப்பட்ட நாவலரின் சிலையையும் அங்கிருந்து அப்புறப்படுத்தினோம். ஓர் இனம் தனது வரலாற்றுப் பதிவுகளை சான்றாதாரப்படுத்திக்கொள்ளும் போதே அந்த இனம் தனது பெருமைகளை, தொன்மைகளை தனது அடுத்த சந்ததிக்கு கைமாற்ற முடியும்.

ஆனால், இது விடயத்தில் நாம் தவறிழைத்து விட்டோம் என்றே கூறவேண்டும். எமது இனத்தின், மொழியின் பெருமைகளை தொல்லியல் சான்றுகள் மூலம் காண்பிக்கின்றபோது, அந்த இனத்தின் எதிர்காலச் சந்ததியும் இனம் சார்ந்த, மொழி சார்ந்த பற்றுறுதியை தன்னகத்தே ஏற்படுத்திக் கொள்ளும்.

எனவே, இதுகாறும் நாம் விட்ட தவறை நிவர்த்தி செய்வதற்காக தமிழினத்தின் வரலாற்றுப் பெரு[illegible]களை, ஆவணப்படுத்தவும், பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இது விடயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் காத்திரமான நடவடிக்கைகளை உருவாக்குவது தேவையானதாகும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் முகவரியற்றியங்கும் அரும்பொருள் காட்சியகம் புத்துயிர் பெறவேண்டும். அந்த அமைப்பின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அதனை செம்மைப்படுத்த முயற்சிக்க வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# தெற்காசியப் பிராந்தியத்தில் வருடாந்தம் 5000 துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன

## யுனிசெவ் பிரதிநிதி சு[illegible]டிக்காட்டு

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்தியத்தில் பெண்களும் சிறுவர்களும் பாலியல் தொழிலுக்[illegible]ாக விற்பனை செய்யப்படுதல் வருடா வருடம் [illegible]தி[illegible]த்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் [illegible]றுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் செடிற் றெசி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவா அக்கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தெற்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் 2001 ஆம் ஆணடு உலகளாவிய சிறுவர் கடத்தல்களுக்கெதிரான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போதும் தெற்காசியப் பிராந்தியத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளமைக்கான காரணம் குறித்து உரிய அடிப்படைக் காரணங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

தெற்காசியப் பிராந்தியத்தில் மாத்திரம் வருடமொன்றுக்கு சுமார் 5 ஆயிரம் பெண்களும் சிறுவர்களும் விற்பனை மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

அதேவேளை, உலகளாவிய ரீதியில் 1.2 மில்லியன் பெண்களும் சிறுவர்களும் இவ்வாரான கட்டாய பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்
(ரு-8)

# சிங்கள தேசத்தின் ஏமாற்று வித்தை நாட்டில் நீண்டகாலம் நீடிக்காது

## அரியநேந்திரன் எம்.பி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

இலங்கையில் சமாதான முன்னெடுப்பில் நோர்வே நாட்டின் அனுசரணையை நிராகரிக்கக் கோரியும் விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி நகலை நிராகரிக்க கோரியும் ஹெல உறுமய கையெழுத்து வேட்டைக்கு தயாராவதும் ஜே.வி.பியினர் பாதயாத்திரை மேற்கொள்வதும் கண்டிக்கத்தக்கன. தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த மட்டில் ஏமாற்றுக்காரர்கள் இச் செயற்பாடுகளுக்கு அஞ்சி அடங்கிவிடமாட்டார்கள் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கள பேரினவாத தேசத்தில் இனவாதம் இன்று நேற்று முளைத்த ஒன்றல்ல.கடந்த 55 வருடங்களாக முளைத்துள்ள இனவாதம் மிலேனியம் வருடத்திலும் பரந்து காணப்படுகின்றது.

அகிம்சைப் போராட்டத்தின் மூலம் எமது உரிமையை வென்றெடுக்க எமது முன்னோர்கள் போராடிய போதும் இனவாதம் தடுத்து நிறுத்தியது.

இன்று ஆயுதப் பலத்தின் மூலம் பலவெற்றிகளைக கண்ட எம் இனம் ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய தீர்வுக்காக நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லும் போது இனவாதம் தடைபோடுகின்றது.

சிங்கள தேசத்தின் இனவாதப் போக்கல் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணமுடியாத நிலை ஏற்பட்டால் தமிழீழத்தை உருவாக்க உரம் கூடிய பெருமை சிங்கள தேசத்தின் இனவாத புத்த பிக்குகளையும் ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயக் கட்சியையுமே சாரும்.

இவ்வாறானவர்களின் இனவாதத்தைச் சர்வதேசம் புரிந்து கொண்டு இலங்கைக்கு உதவி வழங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். யுத்தமும் சமாதானமும் பேச்சுவார்த்தையும் இன்றி சிங்கள தேசம் தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றி வருவது நீண்ட காலம் நீடிககாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரு-121)

# அம்பாறை முஸ்லிம் பகுதிகளில் வியாழனன்று பூரண ஹர்த்தால்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று முன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வட்டமடு பிரதேசத்தில் முஸ்லிம் விவசாயிகள் தமது காணிகளில் விவசாயம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதற்கான அனுமதியைக் கோரியும் ஹர்த்தாலுக்கான அழைப்பை அக்கரைப்பற்று வட்டமடு விவசாயிகள் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. குறிப்பிட்ட விவசாயிகளினால் அடையாளம் காணப்பட்டுள்ள காணி கால்நடைகளிற்குரிய மேய்ச்சல் தரை என கால்நடை வளர்ப்போர் தெரிவிக கின்றார்கள். கடந்த கால யுத்த சூழ்நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் செல்வாக்கு மூலம் முஸ்லிம் விவசாயிகள் மேய்ச்சல் தரைக்குரிய காணிக்கு உறுதியைப் பெற்றுக்கொண்டுள்ளதாக கால்நடை வளர்ப்போர் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஹர்த்தால் காரணமாக பாடசாலைகள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் எதுவும் இயங்கவில்லை. போக்குவரத்து தேவைகளும் தடைப்பட்டிருந்தன.

இதேவேளை, இக் ஹர்த்தாலுக்கான ஏற்பாடு தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் பின்னணியில் இடம்பெற்றுள்ளதாக விடுதலைப்புலிகள் குற்றம்சாட்டியுள்ளனர். (இ)

# அம்பாறையில் ஹர்த்தால்; அரசியல்வாதியின் சதிவேலை

## குயிலின்பன் குற்றச்சாட்டு

(அம்பாறை)

அம்பாறை முஸ்லிம் பிரதேசத்தில் நேற்று முன்தினம நடைபெற்ற ஹர்த்தால் தனியொரு அரசியல்வாதியினால் மேற்கொள்ளப்பட்ட சதி வேலை என தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

தமிழ்-முஸ்லிம் மக்களின் உறவைப் பாதிப்படையச் செய்வதற்காகவே இத்தகைய ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அக்கரைப்பற்று வட்டமேடைப் பிரதேசத்தில் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவும் காணிப் பிரச்சினையை மையப்படுத்தி அண்மையில் உளவு இயந்திரம் ஒன்றைக் கடத்திச் சென்றுள்ளமைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை.

இந்நிலையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதை முஸ்லிம் மக்கள் கூட விரும்பவில்லை எனவும் குயிலின்பன் மேலும் தெரிவித்தார். (க)

# மாணவர் அனுமதியில் மோசடி; சுயாதீனக் குழு விசாரிக்கும்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் முதலாம வகுப்பிற்கு பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதில் மோசடி இடம்பெற்றால் இரண்டு வாரத்திற்குள உரிய பாடசாலைக்கு எதிராக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ள சுயாதீனக் குழுவொன்றின் மூலம் இது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலமும் பிரச்சினைக்குரிய தீர்வு கிடைக்கவில்லையாயின் கல்வி அமைச்சின் மேன்முறையீட்டு ஆணையாளருக்கு இதுகுறித்து அறிவிக்க முடியும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ரு-121)

# யாழ். பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர் இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளராகக் கடமையாற்றிய அனுசா சிவனேஸ்வரன் கடந்த புதன கிழமை தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் யாழ்.பல்கலைக்கழகப் பதில் பதிவாளராக கடமைப் பொறுப்பை ஏற்ற இவர், பரீட்சைகள் கிளை சிரேஷ்ட உதவிப்பதிவாளராகவும் கடமைபுரிந்து கொண்டிருந்தார்.

இந்நிலையில், யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தருக்கு அனுப்பிவைத்துள்ள இராஜினாமாக் கடிதத்தில், பல்கலைக்கழக பரீட்சைப் பகுதியிலும் தொடர்ந்து கடமையாற்றுக் கொண்டிருப்பதால் வேலைப் பழு உள்ளதாகவும் அத்துடன் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகஸ்தர்களின் போதிய ஒத்துழைப்பின்மையினால் தொடர்ந்தும் கடமையாற்ற முடியாதிருப்பதாகவும இதனால் பதில் பதிவாளர் பதவியை இராஜினாமா செய்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ரு-5)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

தியாகம் செய்யுங்கள்! துறந்து விடுங்கள். விட்டு விடுங்கள். பூஜ்யத்திற்காக அல்ல, ஒன்றுமில்லாததற்காக அல்ல, உயர்ந்ததை அடைவதற்காக. ஆனால் இதை யாரால் செய்ய முடியும். உயர்ந்தது கிடைக்காத வரை உங்களால் முடியாது. நீங்கள பேசலாம், நீங்கள் போரிடலாம், பல காரியங்கள் செய்ய நீங்கள் முயலலாம். ஆனால் உயர்ந்தது கிடைத்ததும் துறவு தானாக வந்து சேரும். கீழானது அப்போது தானாகவே விலகிவிடும்.

சுவாமி விவேகானந்தர்





லண்டனிலிருந்து சென்ற அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை ஜெனீவா விமான நிலையத்தில் வைத்து சு.ப. தமிழ்ச்செல்வன் வரவேற்பதையும் அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம் ஆகியோருடன் தமிழ்ச்செல்வன் கலந்துரையாடுவதை முதல் இரு படங்களிலும் சட்டவல்லுநர்கள் மத்தியில் தமிழ்ச்செல்வன் உரையாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# 7 ம் திகதிக்குள் ஊர்காவல்படையினரை விடுவிக்காவிடின் தீவிர போராட்டம்!

## சிங்கள அமைப்பு எச்சரிக்கை

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரு ஊர்காவற்படையினரையும் ஒக்டோபர் 7 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் விடுவிக்கத் தவறினால் தாம் தீவிரமான போராட்டத்தில் இறங்கப் போவதாக் வடக்கு கிழக்கின் சிங்கள அமைப்பு அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைப்பின் செயலாளர் சுனில் அளுத்கமகே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரு மாதங்களாக சிங்கள ஊர்காவற்படையினரை விடுவிக்க அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாம் வடக்கு கிழக்கின் சிங்கள மக்களை அணிதிரட்டி இதற்கான போராட்டத்தை நடத்தவேண்டும்.

அமைச்சரவை தூதுக்குழுவினர் தந்த உறுதிமொழிகளை மதிப்பதனால் ஒக்டோபர் 7 ம் திகதிவரை போராட்டத்தினை நிறுத்திவைத்திருக்கிறோம் எனத் தெரிவித்தார். (ச-06)

## மறுசீரமைக்கப்பட்ட பஸ்கட்டணங்கள் இன்று முதல் அமுலுக்கு

(கொழும்பு)

மறுசீரமைக்கப்பட்ட பஸ்கட்டணங்கள் இன்று சனிக்கிழமை முதல் அமுலுக்கு வருமென தேசிய போக்குவரத்து ஆணைக் குழு அறிவித்துள்ளது.

பஸ்கட்டண அதிகரிப்புக் குறித்து பயணிகளுக்கு அறிவூட்டுவதற்கு போதிய கால அவகாசம் கிடைக்காதமையினாலேயே இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டதாக போக்குவரத்து ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (க-61)

## 2ம் ஆண்டு நிறைவில் 'நமது ஈழநாடு'

'நமது ஈழநாடு' பத்திரிகையின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைகழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

## பதவிப்பிரமாணம் நடைபெறவில்லை

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபராக சத்தியப் பிரமாணம் செய்யவிருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ நேற்று பதவி பிரமாணம் செய்யவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பதவிப் பிரமாணத்திற்கான கடிதம் ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப் பெறாமையாலேயே பதவிப்பிரமாணம் நடைபெறவில்லை. (ச-8)

---

### 512 ஆவது...

யாக அதனை வழங்கவேண்டும் என இராணுவத்திற்கு உத்தரவிட்டதுடன் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

குருநகரைச் சேர்ந்த வின்சன் சுமன் (வயது 22), டொனால்ட் றீகன் (வயது 22), கிரேசியன் ஜெகன் (வயது 19), பொஸ்கோ டல்சன் (வயது 23) ஆகிய நால்வருக்குமே மீன்பிடி அனுமதி மறுக்கப்பட்டது.

இவ் வழக்கு தொடர்பாக 512 ஆவது பிரிகேட் தளபதி மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோருக்கும் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தலைவரின் ஆளுமையை வெளிப்படுத்தும் நூல்

(சுவிஸ்)

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் எந்நிலைமையையும் எதிர்கொள்ளத்தக்க தலைவர் பிரபாகரன் ("PRABHAKARAN" A LEADER FOR ALL SEASONS) என்னும் சிறப்பு நூல் ஒன்று இன்று மாலை 6 மணிக்கு சுவிஸ்சில் உள்ள பாரென் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் இருந்து சுவிஸ் சென்றிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறை, பொறுப்பாளர் பா. நடேசன், நீதிநிர்வாக பொறுப்பாளர் பரா, மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நூலில் பிரபாகரனின் பன்முகத் தன்மையை வெளிப்படுத்தும் ஏராளமான புகைப்படங்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-121)

## பரிசளிப்பு விழா

(பொலிகண்டி)

தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் க. சின்னத்தம்பி கலந்து கொள்ளவுள்ளார். (ச-106)

## ஹயஸ்-மோட்டார் சைக்கிள் விபத்துக்கள்-மூவர் படுகாயம்

(துன்னாலை)

ஹயஸ் வானும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் படுகாயமடைந்தார்,

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் துன்னாலை முள்ளிப்பாலத்திற்கு அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொடிகாமத்தை சேர்ந்த இராசையா சுந்தரமூர்த்தி (வயது35) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் பண்டத்தரிப்பிலிருந்து நல்லெண்ணெய் ஏற்றிச் சென்ற வேளையே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதன் போது அவர் ஏற்றிச்சென்ற 50லீற்றர் நல்லெண்ணெய் விரயமாகியுள்ளது.

துன்னாலை முள்ளிப்பாலத்திற்கு அண்மையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தை பார்வையிட்டு திரும்பும் வழியில் ஹயஸ் வானுடன் மோதியதில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தை சேர்ந்த எ.வி.உபாலி (வயது 36) என்பவர் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

முன்னால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த ஹயஸ் வான் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த கரணவாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை துரைராசா (வயது48) என்பவர் மயக்கமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-101)

---

### சு.ப. தமிழ்ச்செல்வன்...

சுவிஸ்லாந்தின் தலைநகர் ஜெனீவாவில் உள்ள விடுதி மண்டபம் ஒன்றில் தமிழீழத் தேசியத் தலைவரின் படம் வைக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு கலந்துரையாடல் ஆரம்பமானது.

இக் கலந்துரையாடல் ஆரம்பமாவதற்கு முன்னர் தாயக மண் மீட்புப் போரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் அரச படைகளால் கொல்லப்பட்ட மக்களுக்குமான வணக்கம் செலுத்தப்பட்டது. இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விளக்க வுரை ஒன்றை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் அடுத்தகட்ட சமாதான நடவடிக்கை தொடர்பாகவும் புதிய அரசியல் வியூகங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தமது சட்ட நிபுணர்களுடன் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், கா.வே. பாலகுமாரன், பரா, செ.புலித்தேவன், தமிழ்விழி, செல்வி, திருமதி அடேல் பாலசிங்கம், வி. உருத்திரகுமாரன், அன்ரன் பொன்ராசா, பா. நடேசன், இ. கௌசல்யன், இரேனியஸ் செல்வின், ஜோய் மகேஸ்வரன், சாந்தன், பா. பாஸ்கரன் மற்றும் சட்ட நிபுணர்களான சிவாபசுபதி, போல் டொமினிக், விஸ்வேந்திரன், தம்பியப்பா ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பரந்தன் யாழ். வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட ,வடபிராந்திய பாரஊர்தி உரிமையாளர் சங்கப் பணிமனை இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (ற-47)

---

### நவம்பர்...

கையை ரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்திருந்த நான்கு மனுக்களை நேற்றுப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

மக்கள் விடுதலை முன்னணி, சிங்கள மக்கள் கட்சி, சிஹல உறுமய ஆகிய மூன்று கட்சிகளும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா முன் இவ் மனுத்தாக்கலை செய்திருந்தனர்.

இம் மனுக்களில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அமைச்சர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.(ம)


புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

தரம் 5

பாடசாலைகளுக்கானது
தனியார் கல்வி நிறுவனங்களுக்கானது
தனிப்பட்டவர்களுக்கானது

தொகையாகவும் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நிறுவனங்கள், புத்தகசாலைகள், தனிப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி 3.10.2004

சுந்தர் வெளியீடு

844,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 222 7086


---

### மன்னாரில் நேற்றுப் பதற்றம்...

செய்யப்பட்டது.

வன்முறையில் ஈடுபட்ட குழுக்கள் விடுதலைப் புலிகளின் பேசாலை மற்றும் மன்னார் அலுவலகங்கள் முன்பாக கூடி வன்முறைகளில் ஈடுபட்டனர். இதன் காரணமாக மூன்று அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதோடு மோட்டார் சைக்கிள்கள் உட்பட அங்கிருந்த உடைமைகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இதனையடுத்து விடுதலைப் புலிகளின் அலுவலகங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தினையடுத்து நேற்றுக் காலை அவசர கூட்டம் ஒன்று மன்னார் செயலகத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள், மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம், மன்னார் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த பண்டார பட்டேவல, மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாந்த உடப்புமுல, மன்னார் ஆயர் இராசப்பு யோசப் ஆண்டகை, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விநோதராதலிங்கம், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், கடற்புலிகளின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் நிலவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.